# உதயன்

விலை ரூபா 6-00

ஈடர்: 1 வள்ளுவர் ஆண்டு 2029 வைகாசி 08 (22-05-1998) வெள்ளிக்கிழமை UTHAYAN - A Lively National Tamil Daily - திர்: 150



பொது சன நூலகம்
22 MAY 1998
யாழ்ப்பாணம்


## திருமலைக் கடலில் 5 மணி நேரம் சமர்!

கொழும்பு, மே 22

கிழக்கில் திருகோணமலை வெருகல் கடற்பரப்பில் கடற்புலிகளுக்கும், கடற்படையினருக்கும் இடையில் நேற்று அதிகாலை 5 மணி நேரம் கடற்சமர் இடம்பெற்றதாக கொழும்புச் செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

வெருகல் கடற்பரப்பில் வெடிமருந்து நிரம்பிய கடற்புலிகளின் படகுகளுடன் கடற்படையினர் கடும் சமரில் ஈடுபட்டு புலிகளின் 5 படகுகளை மூழ்கடித்துவிட்டதாகவும்—

இச் சமரில் கடற்படையினரின் ஏழு டோறாப்படகுகள் ஈடுபட்டன என்றும்—தெரிவிக்கப்பட்டது.

இச் சமரில் கடற்படையினரின் டோறா படகு ஒன்று சேதமடைந்ததாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

(இ-8-7-3-21)

## வடக்கு-கிழக்கு கல்வி வலயத் திட்டம் உடன் அமுலுக்கு வரமாட்டாது!

### கல்வி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மே 22

''வடக்கு—கிழக்கு கல்வி வலயத் திட்டத்தை அமுல் செய்வதை உடன் அனுமதிக்க முடியாது'' என்று கல்வி, உயர்கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரான தெரிவித்துள்ளார்.

இந்தப் பணிப்புரையை வடக்கு—கிழக்கு கல்வியமைச்சு செயலாளருக்கு அனுப்புமாறு அவர் தமது அமைச்சுச் செயலாளருக்கு நேற்றுப் பணித்துள்ளார் என கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

வடக்கு — கிழக்கு மாகாணத்தில் கல்வி வலயத் திட்டத்தை இம்மாதம் முதல் நடைமுறைப்படுத்த வடக்கு —கிழக்கு மாகாணக் கல்வியமைச்சு நடவடிக்கை எடுத்ததும் —

கல்வி, உயர்கல்வி அமைச்சரின் எழுத்து மூலப் பணிப்புரை கிடைக்காததால் அது பிற்போடப்பட்டதும் தெரிந்தவையே.

இது தொடர்பாக மாகாணக் கல்வியமைச்சு செயலருக்கு அனுப்புமாறு அமைச்சர் தமது செயலருக்கு பணித்துள்ள பணிப்புரை விபரம் வருமாறு:-

வடக்கு-கிழக்கில் நிரந்தர ஆளணியினரைக் கண்டுபிடிக்கும் வரை வலயத் திட்டத்தை நடைமுறைப்படுத்த

(10 ஆம் பக்கம் பார்க்க)

# உதவும் நாடுகளின் நிதியில் ரூ. 950 கோடி வெட்டு விழும்!

## பீரிஸ் தெரிவிப்பு

கொழும்பு, மே 22

எதிர்வரும் 26 ஆம், 27 ஆம் திகதிகளில் பாரிஸில் நடைபெறவிருக்கும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் மாநாட்டில் இலங்கைக்கான உதவி 15 கோடி அமெரிக்க டொலரால் (இலங்கை நாணயத்தில் 950கோடி ரூபா) குறைக்கப்படும் என நம்பப்படுகிறது.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் கடந்த வருடம் இலங்கைக்கு 85 கோடி அமெரிக்க டொலரை வழங்கின.

ஆனால் இம்முறை 70 கோடி அமெரிக்க டொலர் உதவியை மட்டுமே அந்த நாடுகள் வழங்கும் என நம்பப்படுகிறது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்தச் செய்தியாளர் மாநாடு நேற்று நடைபெற்றபோது அதில் கலந்துகொண்ட பிரதிநிதி அமைச்சரும், நீதி அரசமைப்பு விவகார அமைச்சருமான பேராசிரியர் ஜி. எல், பீரிஸ் இந்த உதவி குறைக்கப்படுவதை ஒப்புக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

இச்சந்தி இரனி



ரூபா950கோடி வெட்டு வயிற்றில் தான் அடிக்கப் போகுது பாருங்கோ...

## முல்லைத்தீவுப் பகுதியில் கிபிர் விமானம் தாக்குதல்!

### 2 மீனவர் பலி; 11 பேர் காயம்

வவுனியா, மே 22

முல்லைத்தீவு மாவட்டம், சிலாவத்தையில் கிபிர் விமானம் நேற்றுக் காலை 8-30 மணியளவில் நடத்திய தாக்குதலில் இரு அப்பாவி மீனவர்கள் உயிரிழந்தனர் என்றும் —

11 பேர் காயமடைந்தனர் என்றும் — இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னியில் இருந்து வவுனியாவுக்குக் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

சிலாவத்தை மூன்றாம் கட்டைப் பகுதியில் கரைவலை தொழிலில் ஈடுபட்ட மீனவர்கள் மீது இத்தாக்குதல் நடத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கலதாரி ஹோட்டல் குண்டு வெடிப்பு தொடர்பாக 11 தமிழர்கள் கைது!

கொழும்பு, மே 22

கொழும்புகலதாரி ஹோட்டல் குண்டு வெடிப்புத் தொடர்பாக விசாரணை நடத்தி வந்த மத்திய மாகாண விசேட பொலீஸ் குழுவினர் 11 தமிழர்களைக் கைது செய்துள்ளனர்.

கண்டி, கட்டுகஸ்தோட்டையில் வாகனம் விற்பனை செய்யும் நிலையம் ஒன்றில் வாகனம் கொள்வனவு செய்யச்சென்ற சமயம் 4 பேரையும் —

மட்டக்களப்பு, நாவற்குடா, அரசடி, மாவடி, ஆரையம்பதி ஆகிய பகுதிகளில் மேற்கொண்ட விசாரணைகளில் 4 பேரையும் —

கொழும்பு விடுதியில் வைத்து மூன்று பேரையும்— கைது செய்துள்ளதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட லொறியில் கொக்கட்டிச் சோலையில் வைத்து குண்டுபொருத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சரோஜினியின் இடத்துக்கு சிவபாலன் நியமனம்?

### கூட்டணியின் அரசியல்குழு ஆராய்வு

கொழும்பு, மே 22

யாழ். மாநகர சபை முதல்வராக தமிழர் விடுதலைக் கூட்டணியின் சட்டத்துறைச் செயலாளர் பொன்னுத்துரை. சிவபாலன் பதவியேற்கலாம் என நம்பகமாகத் தெரியவருகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணி அரசியல்குழு நேற்று கட்சியின் உப தலைவர் வீ. ஆனந்தசங்கரியின் தலைமையில் கூடிய சமயம் இது குறித்து ஆராய்ந்தது.

கூட்டணியின் உதவிச் செயலாளர் மாவை சேனாதிராசா, சிரேஷ்ட உப-தலைவர் வீ. ஆனந்தசங்கரி, சட்டத்துறைச் செயலாளர் பொ. சிவபாலன் ஆகியோரின் பெயர்கள் முதல்வர் பதவிக்கு பிரஸ்தாபிக்கப்பட்டதாகவும் —

இறுதியில் சிவபாலனின் பெயர் சிபார்சு செய்யப்பட்டதாகவும்— தெரியவந்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ரவி கருணநாயக்க மீது ஒழுங்கு நடவடிக்கை

கொழும்பு, மே 22

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியைச்சேர்ந்த ஜனநாயக ஐக்கியதேசிய முன்னணி (லலித் பிரிவு) நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணநாயக்க மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட இருப்பதாக அமைச்சரவைப் பேச்சாளரும் தபால் தொலைத் தொடர்புத்துறை அமைச்சருமான மங்கள சமரவீர அறிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## காங்கேசன் மின்நிலையம் இயங்குவது தாமதமடையும்

### பொருள்கள் எடுத்துவர கப்பல் வசதி இல்லை

யாழ்ப்பாணம், மே 22

காங்கேசன்துறையில் நிறுவப்பட விருக்கும் மின் நிலையம் மூலமாக அடுத்த மாதம் யாழ். மாவட்டத்துக்கு மின்சார விநியோகம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்ட போதும் —

ஒகஸ்ட் மாதம் வரை அது தாமதமாகும் என தற்போது தெரிய வந்துள்ளது.

இந்த மின் நிலையத்தில் பொருத்தப்படவிருக்கும் ஒவ்வொன்றும் 2 ஆயிரம் கே.வி.ஏ. வலுவுடைய எட்டு ஜெனரேட்டர்களையும், நான்கு ரான்ஸ்போமர்களையும் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வர கப்பல் வசதியை செய்து கொடுப்பதில் அரசாங்கம் காட்டும் அசமந்தப்போக்கே இந்த நிலைக்குக் காரணம் எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

காங்கேசன்துறையில் மின் நிலையம் நிறுவ மின்சார சபை அமெரிக்க நிறுவனமான ''கூல் எயர்'' உடன் கடந்த பெப்ரவரி 20 ஆம் திகதி ஒப்பந்தம் செய்த போது, 3 மாத காலத்தில் அந்த நிலையத்தை அமைப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஒலுமடுவில் இரு படையினர் பலி!

மட்டக்களப்பு, மே 22

வன்னியில் ''வெற்றி உறுதி'' யுத்த முனையில் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் 2 படையினர் கொல்லப்பட்டனர். மூவர் காயமடைந்தனர்.

நேற்று அதிகாலை ஒலுமடுவில் இச்சம்பவம் இடம் பெற்றது.

வீதி கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் மீது விடுதலைப் புலிகள் பதுங்கியிருந்து தாக்குதல் நடத்தினர் என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுன்னாகம்

## றோட்டரக்ட் கழகம்

நடத்திய

## பொதுஅறிவுப்போட்டி 98

மேற்படி போட்டி முடிவுகள் வருமாறு:

**மேற்பிரிவு:**

1ஆம் இடம்: செல்வன் ம. பி. வீணன்
யா/ யூனியன் கல்லூரி

2ஆம் இடம்: செல்வன் சி. சிவரூபன்
யா/ மகாஜனக் கல்லூரி

3ஆம் இடம் செல்வி செ. அகல்யா
யா/ சுண்டுக்குழி மகளிர்கல்லூரி

**இடைநிலைப் பிரிவு:**

1ஆம் இடம்: செல்வன் இ. கேதாரசர்மா
யா/ யாழ் இந்து

2ஆம் இடம்: செல்வி விஜயா பிரான்ஸிஸ்
யா/ திருக்குடும்ப கன்னியர் மடம்

3ஆம் இடம்: செல்வன் தி. தஜந்தன்
யா/ மகாஜனக் கல்லூரி

செயற்திட்ட இயக்குநர்.

(சி/3800)

## கண்ணீர் அஞ்சலி



### திருமதி தாட்சாயணி சிவானந்த சர்மா

ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய
இசை ஆசிரியை

எமது பாடசாலையின் சிரேஷ்ட இசை ஆசிரியை

திருமதி தாட்சாயணி சிவானந்த சர்மா

அவர்கள் 21- 05- 1998 வியாழக்கிழமை கொழும்பில் சிவபதமடைந்து விட்டார்.

இதனால் சோகமுற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கும், உறவினருக்கும், எமது பாடசாலையின் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்கும் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், பெற்றோர்,
பழைய மாணவர் சங்கத்தினர்.

(56172)

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி தாட்சாயணி சிவானந்த சர்மா

கலைப்பீட 3 ஆம் வருட இந்து நாகரிக சிறப்புக் கலை மாணவன் சிவானந்த சர்மாவின் (கோப்பாய் சிவம்) அன்பு மனைவி தாட்சாயணி கொழும்பில் 21- 5- 98 வியாழக்கிழமை அன்று சிவபதம் அடைந்து விட்டார்.

மறைந்த அன்னாரது குடும்பத்தினர்க்கும் உறவினருக்கும் ஆழ்ந்தஅனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மசாந்திக்குப் பிரார்த்திக்கின்றோம்.

இந்து நாகரிகத்துறை
பேராசிரியர், சிரேஷ்ட விரிவுரையாளர்கள்,
விரிவுரையாளர்கள்,
1 ஆம் A, B, 2 ஆம், 3 ஆம் பகுதி.
இந்துநாகரிக பொதுக்கலை,
சிறப்புக்கலை மாணவர்கள்.

(56176)

## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி.

இன்று
கார்த்திக், மீனா,
ஹீரா நடிக்கும்
**அரிச்சந்திரா**
சனி, ஞாயிறு
பிரசாந்த் - மோகினி
நடித்த
**உனக்காகப் பிறந்தேன்**
நேரம்:- 10-30, 2-30
பழைய நேரம்
தொலை பேசி இல:
070 - 212223

(55969)

## ஸ்ரீ செல்வா திரையரங்கு

ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்.

தினசரி
10-30, 2-30 மணிக்கு
(பழைய நேரம்)
(இன்றைய CD வெளியீடு)
சத்தியராஜ் - பிரபு
ரம்பா நடித்த
**சிவசக்தி**

(56173)

## நாகம்ஸ் சினிமா

சுன்னாகம்.

22 - 05 - 98 வெள்ளி
அகல வெண் திரையில்
சரத்குமார் - ரோஜா
நடித்த
**சூரியன்**
காட்சி:- 10-30, 2-30

(56183)

## ராஜா டாக்கீஸ்

யாழ்ப்பாணம்.

கார்த்திக், செளந்தர்யா
நடித்த
**பொன்னுமணி**
தினசரி
2-30, 5-15
சனி, ஞாயிறு
காலை 10-30 – 2-30, 5-15
(புதிய நேரம்)

(சி/3804)

## புலமைப் பரிசில் 1998

28ஆவது பரீட்சையில்
அதி கூடிய
புள்ளிகள் பெற்றோர்

1. த. அஜந்தன்
யா. இ. ஆ. பா
2. அ. ஜனனி
யா. ஜ. ச. சை. வி.
3. யோ. பத்மயோகன்
4. கு. டில்ஷான்
யா. உ. ம. க.
5. தி. பிரஷாந்த்
யா. க. ஆ. பா.
6. சி. சுலக்ஷன்
யா. இ. ஆ. பா.
7. பா. செளந்திகா
யா. இ. ஆ. பா.
8. க. நிஷாந்த்
யா. சு. சி. பா. வி.
9. அ. சுலக்ஷன்
10. ர. தயாபரன்
யா. சு. சை. வி.
11. சி. யோகானந்த்
யா. இ. ஆ. பா.
12. கா. முகிலன்
யா. உ. ம. க.

அடுத்த பரீட்சை
24 – 05 – 98

**BOND**
யாழ்ப்பாணம்.

(56179)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி அருளம்மா நாகலிங்கம்

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த திருமதி அருளம்மா நாகலிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) 20 05-98 இல் காலமானார்.

இவர் சுதுமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் இளைப்பாறிய அதிபருமாகிய திரு செல்லப்பா நாகலிங்கத்தின் அன்பு மனைவியும், ஸ்ரீஸ்கந்தராசா (பிரதம கணக்காய்வாளர்-கார்கில்ஸ்), திருமதிதேவகி மகேந்திரன் (சிரேஷ்டவிரிவுரையாளர், கிழக்குப்பல் கலைக்கழகம், மட்டக்களப்பு), செல்வி வாசுகி ஆகியோரின் அன்புத்தாயாரும், ஸ்ரீஇலட்சுமிதேவி மகேந்திரன் (விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக்கழகம், மட்டக்களப்பு) ஆகியோரின் அன்பு மாமியாரும், செந்தூரன், மயூரிக்கா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

இறுதிக் கிரியைகள் சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
செ. நாகலிங்கம்

'ஸ்ரீபதி'
ரயில் றோட்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

(56175)

## திருமதி வீரசிங்கம் மனோன்மணி

ஊரெழு கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வீரசிங்கம் மனோன்மணி 21-05-98 இல் காலமானார்.

அன்னார் காலஞ் சென்ற வீரசிங்கத்தின் அன்பு மனைவியும், றோகினி, செல்வராசா (தம்பி), சுபாதேவி ஆகியோரின் அன்புத்தாயாரும், வாமதேவன், தர்சினி, கணேசநாதன் ஆகியோரின் அன்பு மாமியும், வாமினி, சாமினி, சசிகுமார், வவுசியா, நிரோஸ்வர்மன், சதூஸ்வர்மன், சபேசன், அபிரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 23-05-98 சனிக்கிழமை காலை 10-00மணி அளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பொக்கணை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்..

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வீ. செல்வராசா (தம்பி)
(மகன்)

ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்.

(56185)

## சின்னத்தம்பி செல்லையா

(கடைக்காரக் கந்தையா)

நீர்வேலி மேற்கைச் சேர்ந்தவரான சின்னத்தம்பி செல்லையா 21 – 05 - 98 இல் காலமாகி விட்டார். இவர் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி சின்னத்தம்பி ஆச்சிக்குட்டி தம்பதிகளின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான திருமதி அருளம்பலம் நாகம்மா, திருமதி குமரையா அன்னலட்சுமி (நெடுங்கேணி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், இராஜேஸ்வரி (பட்டு) விநாயகசுந்தரம் (ராசன்), இராஜேஸ்வரன் (தேவன்), இரஞ்சினி, ஜெயரூபன் (அப்பன்) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், காலஞ்சென்ற கனகரத்தினம் (C. T. B) வசந்தகுமாரி, தங்கேஸ்வரி, கனகலிங்கம் (திருநெல்வேலி சந்தை), தங்கேஸ்வரி ஆகியோரின் மாமனாரும், ஜெயந்தி (ஜேர்மனி), பிரகலாதன் (ஜேர்மனி), யாழினி, மயூதரி, சிந்துஜா, தனோஜன், தர்சிந்தா, தெனோஜன், கிரிசிந்தா, வினோஜன், காயத்திரி ஆகியோரின் அன்புப் பேரனும் சாருகாவின் (ஜேர்மனி) அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் 21 – 05 – 98 இல் நீர்வேலி மயானத்தில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாபேரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மகள் (பட்டு)

இராஜ வீதி,
நீர்வேலி மேற்கு, நீர்வேலி.

(56161)

## ஸ்ரீமதி தாட்சாயணி சிவானந்த சர்மா

(யாழ். ஆவரங்கால் நடராஜராமலிங்க வித்தியாசாலை சங்கீத ஆசிரியை)

ஆவரங்கால், ஸ்ரீமதி தாட்சாயணி சிவானந்த சர்மா நேற்று (21 – 5 - 98) காலை கொழும்பில் காலமாகி விட்டார்.

இவர் ப. சிவானந்தசர்மாவின் (3ஆம் வருட மாணவர், யாழ். பல்கலைக்கழகம்), (கோப்பாய் சிவம்) தர்மபத்தினியும், காலஞ்சென்ற நாராயணசாமிக் குருக்கள், சரஸ்வதி அம்மா ஆகியோரின் மகளும், ஸ்ரீமதி ஸ்ரீ ச. பஞ்சாட்சர சர்மா தம்பதிகளின் மருமகளும், சுப்பிரமணியக் குருக்கள் (மலேசியா), சோமாஸ்கந்தசர்மா (விரிவுரையாளர், யாழ். பல்கலைக் கழகம்), பாலச்சந்திரசர்மா (ஆசிரியர், பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி), ஸ்ரீமதி நாகபூசணி கௌரிசங்கரசர்மா, ஸ்ரீமதி வரதராஜசர்மா, ஸ்ரீமதி சௌதாமினி சாம்பசிவ ஐயர், ஸ்ரீ சோமசேகரசர்மா, ஸ்ரீமதி அனுராதா உத்தமசர்மா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் கொழும்பு கொட்டாஞ்சேனை வீதி, 160 ஆம் இலக்க சுப்பிரமணியக் குருக்களின் இல்லத்தில் நேற்று நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அறியத்தருகிறோம்.

(தொலைபேசி எண் 01-334648)

தகவல்:
அ நா. சோமாஸ்கந்தசர்மா

கோண்டாவில் மேற்கு, தாவடி.

(55415)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30 ஆண்டு கால அதிகாரம் முடிவு

# சுஹார்ட்டோ ராஜினாமா!



ஜகார்த்தா, மே 22

ஒருவார காலத்துக்கும் மேலாக நீடித்த எதிர்ப்புக் கலவரங்களைத் தொடர்ந்து இந்தோனேசிய அதிபர் சுஹாட்டோ (வயது 76) நேற்று தமது பதவியை ராஜினாமாச் செய்தார். தேசிய தொலைக்காட்சியில் தோன்றி தமது முடிவை அவர் நாட்டு மக்களுக்கு அறிவித்தார்

இந்தோனேசியாவில் மூன்று தசாப்த காலமாக நீடித்த சுஹார்ட்டோவின் ஆட்சி அதிகாரம் இதன் மூலம் முடிவுக்கு வந்தது.

சுஹார்ட்டோ பதவி விலக வேண்டும் எனக்கோரி நாட்டில் இடம்பெற்று வந்த ஆர்ப்பாட்டங்கள் கடந்த வாரம் வன்செயலாக வெடித்ததில் 500 -க்கும் அதிகமானோர் பலியாகினர். பல்லாயிரக் கணக்கான மாணவர்கள் வீதிகளில் இறங்கி போராட்டம் நடத்தினர். ஆனால் அதிபர் சுஹார்ட்டோ தனது 32 வருடகால ஆட்சி அதிகாரத்தை விட்டு விலக மறுத்து வந்தார். இதனால் ஆத்திரமடைந்த மாணவர்களின் போராட்டம் தீவிரமடைந்தது.

ஜகார்த்தாவில் உள்ள நாடாளுமன்றக் கட்டடத்தை முற்றுகையிட்ட மாணவர்கள் புதன்கிழமையன்று ''தேசிய எழுச்சி நாளை'' பிரகடனம் செய்திருந்தனர். பெரும் இரத்தக்களரி ஏற்படும் என எதிர்பார்க்கப்பட்ட சமயத்தில் அதிபர் சுஹார்ட்டோ திடீரெனத் தாமாகவே முன் வந்து பதவி விலகியுள்ளார்.

அமெரிக்காவின் ஆதரவுடன் 1966 இல் அதிபர் சுகர்ணோவின் ஆட்சியைக் கவிழ்த்து விட்டுப் பதவிக்கு வந்தவர் சுஹாட்டோ. ஆனால் உலகில் பனிப்போர் காலம் முடிந்து வல்லரசுகளின் ஆதிக்கப்போட்டி மறைந்ததை அடுத்து சுஹார்ட்டோவை அமெரிக்கா கைவிட்டது. (ஐ)



அதிபர் சுஹார்ட்டோ தமது பதவி விலகலை நாட்டு மக்களுக்கு அறிவிக்கிறார். (படம்: ஏ.பி.).

# பி. ஜே. ஹபிபீ புதிய அதிபர்!

ஜகார்த்தா, மே 22 (ஏ.பி)

அதிபர் சுஹார்டோவின் பதவி விலகலை அடுத்து இந்தோனேசியாவின் புதிய அதிபராக துணை அதிபர் பச்சாருதீன் யூசுப் ஹபிபீ (வயது61) நேற்றுக் காலை சத்தியப் பிரமாணஞ் செய்து பதவியேற்றார்.

முன்னாள் அமைச்சரான ஹபிபீ அதிபர் சுஹார்ட்டோவின் நெருங்கிய பால்ய நண்பர் ஆவார்.

அதிபர் சுஹார்ட்டோவின் ராஜினாமா நேற்று அறிவிக்கப்பட்ட உடனேயே புதிய அதிபர் பதவிக்கு பி. ஜே. ஹபிபீயின் பெயர் தெரிவு செய்யப்பட்டது.

2 ஆயிரத்து 3 ஆம் ஆண்டு முடிவடையவுள்ள பதவிக்காலத்துக்கு ஹபிபீ அதிபராக இருப்பார். அதற்குள் இந்த ஆண்டின் இறுதிக்குள் தேர்தல் நடத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.


சிறுவயது முதல் அதிபர் சுஹார்ட்டோவின் நெருக்கிய நண்பராக இருந்து வரும் ஹபிபீ சுஹார்ட்டோவின் மக்கள் ஆலோசகராகவும், 12 -க்கு மேற்பட்ட சபைகளின் தலைவராகவும் பதவிவகித்துள்ளார். இவற்றில் பல துறைகள் விஞ்ஞான ஆய்வுகளுடன் தொடர்புடையவை.

புதிய அதிபராக ஹபிபீ பதவியேற்றிருப்பது இந்தோனேசிய ஆட்சி அதிகாரத்தில் உடனடியாக பெரிய மாற்றங்களை ஏற்படுத்தி விடப்போவதில்லை என்று அவதானிகள் கருதுகின்றனர்.

''மாணவர்களின்சீற்றம் அடங்கிப்போக இது உதவினாலும் நெருக்கடிகள் தொடர்ந்து நீடிக்கும்'' என்று ராஜதந்திரி ஒருவர் தெரிவித்தார்.

நாடு சந்தித்துள்ள பெரும் நிதி நெருக்கடி அதிபர் பதவி மாற்றத்தின் மூலம் தீர்ந்து விடப்போவதில்லை என்று பொருளாதார வல்லுநர்கள் தெரிவித்தனர்.

(ஐ)



புதிய அதிபராக ஹபிபீ பதவியேற்கும் காட்சி

## கிளின்ரன் வரவேற்பு

அதிபர்சுஹார்ட்டோபதவி விலக முடிவு செய்ததை அமெரிக்கா வரவேற்றுள்ளது. அவரது இந்த முடிவை அதிபர் பில்கிளின்ரன் வரவேற்று கருத்து கூறியுள்ளார்.

ஜப்பான் உட்பட வேறுசில நாடுகளும்சுஹார்ட்டோவின் முடிவை வரவேற்றுள்ளன.

அதிபர் சுஹார்ட்டோவின் 32 ஆண்டுகால ஆட்சியை பாராட்டிய ஜப்பானியப் பிரதமர் இந்தோனேசியாவின் சீர்திருத்த நடவடிக்களுக்கு தனது நாடு தொடர்ந்தும் ஆதரவளிக்கும் என்று கூறியுள்ளார்.

(ஐ)

# 13 வயது முதல் சுஹார்ட்டோவின் நண்பராக விளங்கியவர் ஹபிபீ!

## அவருக்கு ராணுவம் ஆதரவு தெரிவிப்பு

ஜகார்த்தா, மே 22 (சி. என். என.)

இந்தோனேசியாவின் புதிய அதிபராகப் பதவியேற்றிருக்கும் பி. ஜே. ஹபிபீ தனது 13 ஆவது வயது தொடக்கம் சுஹார்ட்டோவின் நெருங்கிய நண்பராவார்.

சுஹார்ட்டோ அச்சமயம் ஒரு கனிஷ்ட இராணுவ அலுவலராக இருந்தார். சுலவேசியில் ஹபிபீயின் சொந்த நகரில் அவர் கடமையாற்றினார்

''76 வயதான சுஹாட்டோவும், 61 வயதான ஹபிபீயும் தந்தையும், மகனும் போன்றவர்கள்'' என்று வர்ணித்தார் ஓய்வு பெற்ற மூத்த இராணுவ அதிகாரி ஒருவர்.

ஹபிபீ கடந்த மார்ச் மாதமே துணை அதிபராக நியமிக்கப்பட்டார்.

'உயர் தொழில்நுட்ப கனவுள்ளவர்' என வர்ணிக்கப்படும் அவர் பெரும் நிதிச் செலவிலான உயர் தொழில் நுட்பத் திட்டங்களை அறிமுகப்படுத்தினார்.

ஆனால் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக அவரது திட்டங்கள் வெற்றியளிக்கவில்லை.

புதிய அதிபராக ஹபிபீ நியமிக்கப்பட்டிருப்பதை இந்தோனேசிய அரசியலில் சக்திமிக்க அந்நாட்டு இராணுவம் அங்கீகரித்து முழு ஆதரவு தெரிவித்துள்ளது.

(ஐ)

# மாணவர், பொதுமக்கள் மகிழ்ச்சி ஆரவாரம்!

அதிபர் சுஹார்ட்டோ தாமாகவே முன்வந்து பதவியை ராஜினாமாச் செய்ததை அடுத்து மாணவர்களும் பொதுமக்களும் ஜகார்த்தா வீதிகளில் மகிழ்ச்சி ஆரவாரம் செய்து ஆடிப்பாடி மகிழ்ந்தனர்.

''சுஹார்ட்டோவின் ராஜினாமாவை நாடு முழுவதுமே மகிழ்ச்சியாகக் கொண்டாடுகிறது'' என்று செய்தியாளர்கள் விவரித்தனர்.

அதிபரின் பதவிலகல் உரை தொலைக்காட்சியில் ஒளிபரப்பானதும் நாடாளுமன்றக்கட்டடத்தை முற்றுகையிட்டிருந்த மாணவர்கள் கரகோஷம் செய்து ஆர்ப்பரித்தனர்.

(ஐ)

# ஈராக் துணைப் பிரதமர் பாப்பரசரைச் சந்தித்தார்

லண்டன், மே 22

ஈராக்கியப்பிரதிப் பிரதமர் தாரிக் அசீஸ் கத்தோலிக்க ஆன்மீகத்தலைவர்பாப்பரசர் 2 ஆவது ஜோன் போலைவத்திக்கானில் சந்தித்து ஈராக் மீதான ஐ. நா. தடைகள் நீக்கப்படுவதற்கு அவரின் உதவியையும் ஆதரவையும் நாடியுள்ளார்.

இந்தத் தடைக்கெதிராக பாப்பரசர் குரல் கொடுக்க வேண்டுமென்று தாரிக் அசீஸ் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

# கம்போடிய எதிரணிக் கூட்டமைப்பின் தலைவர் பதவியை ரணறித் துறந்தார்

நொம்பென், மே 22

கம்போடியாவில் பதவி இறக்கப்பட்ட முன்னாள் பிரதமர் இளவரசர் நொரடோம் ரணறித்தேசியஐக்கிய முன்னணி எனப்படும் நாட்டின் பிரதான எதிரணிக் கூட்டமைப்பின் தலைமைப்பதவியிலிருந்து விலகியிருக்கின்றார்.

தமது கட்சியைக் கட்டி வளர்ப்பதில் ஈடுபடவேண்டுமென்பதாலேயே அவர் கூட்டணித் தலைமையிலிருந்து விலகுவதாக அவருடைய உதவி அதிகாரி கூறியிருக்கின்றார்.

1993 இல் இடம்பெற்ற கம்போடியப் பொதுத்தேர்தலில் இளவரசர் ரணறித்தின் கட்சி வெற்றிபெற்றிருந்தது. ஆயினும் இரண்டாவது பிரதமர் ஹுன் செனினால் சென்ற ஆண்டில் அவர் தூக்கி வெளியேற்றப்பட்டார்.

எதிர்வரும் ஜூலை மாதத் தேர்தலில் அனைத்துக் கட்சிகளுக்கும் ஒரு சமத்துவ நியாயம் வழங்கப்படாவிட்டால் தேர்தலைப் புறக்கணிக்கப் போவதாக எதிரணிக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

(ஐ-8)

# எவரெஸ்ட் சிகரத்தில் 19 மலையேறிகள்

காட் மண்டு, மே 22

மூன்று குழுக்களைச் சேர்ந்த 19 மலையேறுபவர்கள் நேற்று முன்தினம் எவரெஸ்ட் மலைச் சிகரத்தைச் சென்றடைந்துள்ளார்கள் என நேபாள அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவர்களில் அமெரிக்க சுற்றுச்சூழல் ஆர்வலர்களின் மலையேறும் குழுவொன்றைச் சேர்ந்த ஐவரும் அடங்குவர்.

இதற்கு முன்னர் மலையேறியவர்கள் மலைப்பாதை எங்கும் வீசியிருக்கும் வெற்று ஓட்சிசன் போத்தல்கள், தகரக் கொள்கலன்கள் போன்ற குப்பை கூளங்களை நாடு திரும்பி வரும் போது அங்கிருந்து எடுத்துவர இக்குழுவினர் திட்டமிட்டுள்ளனர்.

(ஐ-8)


உலக அரங்கில்

ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம்

## 6 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம்- 1998

மேற்படி சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் ஆனி மாதம் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (09 — 06 — 1998) காலை 10 மணிக்கு சங்கப்பணிமனையில் நடைபெறும். அங்கத்தவர்கள் யாவரும் தவறாது சமுகந்தருமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

அன்றைய தினமே சந்தாப் பணநிலுவையிருப்பின் கட்டி உறுப்புரிமையை உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

கா. கணேசதாசன்
கௌரவச் செயலாளர்

15, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம். (56169)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு

# 150 மெற்றிக் தொன் விதை உருளைக்கிழங்கு

திருநெல்வேலி, மே 22

யாழ். மாவட்டத்தில் 1998, 99 பெரும்போக உருளைக்கிழங்கு செய்கைக்கான விதை உருளைக் கிழங்கை விவசாயிகளுக்கு பெற்றுக் கொடுப்பதற்கான முன் ஏற்பாடுகளை யாழ். கமநல சேவைகள் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

இம் முறை 150 மெற்றிக் தொன் விதை உருளைக் கிழங்கை யாழ். மாவட்டத்திற்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதில் 100 மெற்றிக்தொன் நிறையுள்ள ''டிசரி'' என்ற இனவிதை உருளைக்கிழங்கும், 50 மெற்றிக்தொன் ''லைசா'' என்ற இன விதை உருளைக்கிழங்கும் அடங்கும்.

விவசாயிகளின் சந்தை வாய்ப்பைக் கருத்திற் கொண்டு 150 மெற்றிக் தொன்னுக்கு மேல் விதை உ. கிழங்குஇங்கு கொண்டு வரப்படமாட்டாது என்று யாழ். கமநலச் சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் தெரிவித்தார்.

விதை உருளைக்கிழங்கினை பெற விரும்பும் விவசாயிகள் தமது பகுதி விவசாய சம்மேளனத்திற்கு ஊடாக விண்ணப்பப்படிவங்களைப் பெற்று எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் தமது பிரிவு கமநலச் சேவை கேந்திர நிலையத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் உதவி ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

(ஐ - 135)

## பளையில் விரைவில் தும்புத் தொழிற்சாலை

தென்மராட்சி, மே 22

பளையில் பனை, தென்னை ஆகியவற்றின் மூலப்பொருள்களில் இருந்து தும்பு தயாரிக்கும் ஆலை விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கான இயந்திரம் பனை அபிவிருத்திச் சபையினால் விரைவில் பளை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்திடம் வழங்கப்படவுள்ளதாக பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பாக்கியநாதன் தெரிவித்துள்ளார்.

பளையில் தும்பு ஆலை அமைப்பதற்கென பளைப் பிரதேச செயலகத்தினால் ஒரு லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஐ-117)

## இதய அஞ்சலி

எமது சங்கத்தின் ஸ்தாபகரும், காப்பாளருமான

அருள்திரு.

**F. J. ஸ்ரனிஸ்லோஸ் O. M. I.**

(M A. Ed., B A Hons (Lond.)

அவர்களின் மறைவையொட்டி எமது இதயம் நெகிழ்ந்த அஞ்சலிகளை காணிக்கையாக்குகின்றோம்.

குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கம் [வரை]

குருநகர், யாழ்ப்பாணம். (56166)

## விளையாட்டுத்துறைப் பயிற்சிப் பட்டறை

சுன்னாகம்

**நாகேஸ்வரி வித்தியாசாலை**

விளையாட்டுத்துறையில் ஆர்வமுள்ளவர்களை மேலும்வளர்க்கும்முகமாக பயிற்சிப்பட்டறை ஒன்றை வயது 20-க்கு மேற்பட்ட இருபாலாருக்கும் நடத்தவுள்ளது. விரும்புவோர் வித்தியாசாலையில் இணைப் பதிகாரியிடம் ரூபா 15 செலுத்தி 27-05-98-க்கு முன் விண்ணப்பபபடிவத்தைப் பெற்றுக்கொள்ளவும்.

அதிபர்

யா / சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை

சுன்னாகம் (சி/3796)

## பயிற்சியாளர்கள் தேவை

எமது சங்கத்தில் கோழி வளர்ப்பில் பயிற்சிபெற விரும்புபவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வயது: 1 - 6 - 98 இல் 17 வயது நிரம்பியவராகவும், 23 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

பால்: பெண்

தகைமை: ஆண்டு 10 சித்தியடைந்தவராக இருக்தல் வேண்டும்.

பயிற்சிக் காலத்தில் குறிப்பிட்ட ஒரு தொகை படியாக வழங்சப்படும்.

பயிற்சி பெற விரும்புபவர்கள் சங்கத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து **01-06-98** ஆம் திகதிக்குப் பிந்தாமல் ''பொது முகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்'' என்ற முகவரிக்கு நேரடியாகவோ அன்றி தபால் மூலமோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

பொது முகாமையாளர்

(சி/377)

## கணக்காளர் பரீட்சைக்கான விரிவுரை

நவாலி, மே 22

கணக்காளர் சேவைப் பரீட்சையில் தோற்றுவதற்கு யாழ். மாவட்டத்திலிருந்து விண்ணப்பம் செய்த விண்ணப்பதாரிகளுக்கு எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் 4-30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் ''கட்டு நிதி'' சம்பந்தமான விரிவுரை வகுப்பொன்றை நடத்த யாழ். செயலக கணக்காளர் செ. நாகராசா ஏற்பாடு செய்துள்ளார்.

இப்பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் பரீட்சார்த்திகள் அனைவரும் இவ்விரிவுரை வகுப்பில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

(ஐ-100)

## மண்வெட்டி விநியோகம்

உரும்பிராய், மே 22

கோப்பாய்பிரதேசச் செயலர் பிரிவிலுள்ள கிராம அலுவலர் பிரிவுகள் தோறும் இலவசமாக மண்வெட்டிகள் விநியோகிக்கப்படுகின்றன. யாழ். அரசாங்க அதிபரினால்வழங்கப்பட்ட ஒரு தொகுதி மண்வெட்டிகள், அப்பகுதி விவசாய சம்மேளனங்களினால் சிபார்சு செய்யப்பட்டவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

(ஐ-154)

## PRAY TO THE HOLY SPIRIT

O Holy Spirit thou who make me see everything and show me the way to reach my ideal. Thou who gave me the divine gift to forgive and forget the wrong that was done to me and who are in all instances of my life with me. I in this short dialogue, want to thank Thee for everything and confirm once more that I never want to be separated from Thee no matter how great the material desire may be. I want to be with Thee and my loved ones in your perpetual glory Amen.

Thank you, O Holy Spirit for favour granted.

I. K.

(56163)

மிருசுவில் பாதுகாப்பு அரண் ஊடாக

## தேங்காய் எடுத்துவர அனுமதியில்லை

தென்மராட்சி, மே 22

மிருசுவில் வடக்குப் பகுதி மக்கள் மிருசுவில் முகாம் பாதுகாப்பு அரண் ஊடாக தேங்காய் கொண்டு வருவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதனால் இப் பகுதிமக்கள் தமது காணிகளில் உள்ள தென்னைகளில் பறிக்கப்படும் தேங்காய்களை விற்பனைக்காக கொடிகாமம், சாவகச்சேரிச் சந்தைகளுக்கு கொண்டு செல்ல முடியாதுள்ளதாக கவலை தெரிவித்தனர். (ஐ-117)

## மிதிவெடிகளில் சிக்கும் கால்நடைகள்

சுன்னாகம், மே 22

வலி. தெற்குப் பகுதியில் மிதிவெடிகளில் சிக்கிக் கால்நடைகள் பாதிக்கப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

நிலத்துள் இறுகிப் போயிருந்த மிதிவெடிகள் மழை காரணமாக மண் இளகியதால் —அவற்றின் மீது கால்நடைகள் மிதிக்கும் போது— வெடிக்கின்றன.

இதனால் சில கால்நடைகள் கால்களை இழந்துள்ளன.

(ஐ-27)

## நீர்வேலி கந்தசுவாமி ஆலய திருத்த வேலை ஆரம்பம்

வடமராட்சி, மே 22

'சூரியப் பிரகாசம்' இராணுவ நடவடிக்கையின் போது பலத்த சேதத்துக்குள்ளான நீர்வேலி ஸ்ரீ கந்தசுவாமி கோயில் திருத்த வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

இராணுவ நடவடிக்கையின் போது உள் மண்டபம், வெளிமண்டபம், கோபுரம் ஆகியன சேதமடைந்ததுடன் பிள்ளையார் தேர், சிவன் தேர் என்பன எரித்துச் சேதப்படுத்தப்பட்டிருந்தன.

அத்துடன் விக்கிரகங்களின் அங்கிகள், குடைகள், திருவாசிகள் உட்பட பல பொருள்கள் காணாமற் போயிருந்தன.

இராணுவ நடவடிக்கைக்கு முன்னதாக 1990 ஆம் ஆண்டில் இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சில் ஆறுமுகசுவாமி வாசல் மண்டபம் சேதமடைந்திருந்தது.

இக் கோயிலின் திருத்த வேலைகளை ஒட்டி அண்மையில் அங்கு பாலஸ்தாபனம் நடைபெற்றது. (ஐ-173)

## சைக்கிள் திருடியதாக இருவர் நீதிமன்றில் ஆஜர்

யாழ்ப்பாணம், மே 22

சைக்கிள் திருட்டு தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இருவர் நேற்று முன்தினம் யாழ். நீதிமன்றத்தில் பொலிஸாரினால் ஆஜர் செய்யப்பட்டனர்.

யாழ். நீதிமன்ற பதில் நீதிவான் மு. சபாநாதன் இவ்வழக்கை விசாரித்த போது மேலும் பல சைக்கிள்களின் திருட்டுத் தொடர்பான இருவர் மீதும் சந்தேகமிருப்பதால் ஜூன் முதலாம் திகதி வரை சந்தேக நபர்களான நா. சுந்தரேஸ்வரன் (கொட்டடி), க. விநாயகமூர்த்தி (நாவாந்துறை) ஆகியோரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ஐ-5)

யாழ். நகருக்கு வரும்

## நெடுந்தீவுப் பயணிகள் பஸ் இன்றிப் பாதிப்பு

கடந்த சில தினங்களாக நெடுந்தீவில் இருந்து யாழ். நகருக்கு வரும் பயணிகள் பஸ் சேவை இன்மையால் நீண்ட நேரம் காத்திருந்து நண்பகல் 12 மணிக்குப்பின்னரே குறிகாட்டுவானில் இருந்து யாழ். நகருக்கு வர வேண்டியுள்ளது.

இதனால் நெடுந்தீவுப் பயணிகள் பி.ப. 3 மணிக்கே யாழ். நகரை வந்தடைகின்றனர்.

காலை 7.15-க்கு யாழ். நகரில் இருந்து குறிகாட்டுவான் செல்லும் பஸ்வண்டி நெடுந்தீவுப் படகைப் பாராது உடனடியாகவே யாழ். நகருக்குத் திரும்பி விடுவதால் பயணிகள் இந்தக் கஷ்டத்தை எதிர்நோக்க வேண்டியுள்ளது. நேற்றைய தினம் யாழ். ஆஸ்பத்திரிக்குச் சிகிச்சைக்கென வந்த நோயாளி ஒருவர் பஸ்சேவை இன்மையால் பிற்பகல் 3 மணிக்கே யாழ். நகர் வந்து சேர்ந்தார். இதனால் அவர் வைத்தியசாலைக்கு மறுநாளே செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது.

வழமையாக நெடுந்தீவில் இருந்து பயணிகள் வந்ததும் தனது பயணத்தை ஆரம்பிக்கும் பஸ்வண்டி படகுவந்து சேர்வதற்கு முன் குறிகாட்டுவானில் இருந்து புறப்பட்டு விடுவது குறித்து பயணிகள் சிலர் வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் பொது முகாமையாளர் எஸ் சொக்கலிங்கத்திடம் நேரில் முறையிட்டுள்ளனர்.

(ஐ-111)

அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது)

## மீதிகள் உறுதிப்படுத்தல்

01-08-92—30-09-95வரைக்கான கணக்காய்வு நடைபெறுவதால் 30-09-95 இல் வருமதி, செல்மதிகள் இருப்பின் 30-05-98இற்கு முன்னர் ஆதாரங்களுடன் உறுதிப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

வ. திருஞானசம்பந்தர்,
பதில் பொது முகாமையாளர்.

(56167)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர் தொழில் நுட்பக்கல்வி நிறுவனம்

# 4 ஆம் திகதிமுதல் புதிய கட்டடத்தில்

யாழ்ப்பாணம், மே 22

திருநெல்வேலி கலாசாலை வீதியில் உள்ள இந்துபோர்ட் கட்டடத்தில் தற்காலிகமாக இயங்கி வருகின்ற யாழ். உயர்தொழில் நுட்பக்கல்வி நிறுவனம் எதிர்வரும் நான்காம் திகதி முதல் பலாலிவீதியில் பரமேஸ்வராச் சந்திக்கு அருகில் உள்ள புதியகட்டடம் ஒன்றில் செயற்பட உள்ளது.

தொழில்நுட்பக் கல்லூரியில் இருந்து பிரிந்து டிப்ளோமா கற்கை நெறிகளை மட்டும் கொண்டு கலாசாலை வீதியில் தற்காலிகமாக இயங்கிவந்த உயர் தொழில் நுட்ப நிறுவனம் தனக்காக ஒரு கட்டடத்தைஅமைத்துத் தருமாறு உயர் கல்வி அமைச்சை நீண்டகாலமாக கேட்டுவந்தது. தற்போது உயர் கல்வி அமைச்சின் அனுமதியுடன் பலாலி வீதியில் உள்ள ஒருகட்டடத்தில் இது செயற்பட உள்ளது.

இந்தக் கட்டடத்துடன் இணைத்து புதிதாக கொட்டகை ஒன்றும் அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

கொட்டகை வேலைகள் பூர்த்தியானதும் சிறப்பான முறையில் விரிவுரைகளை நடத்த முடியும் எனவும் — மாணவர்களின் கல்விச் செயற்பாட்டுடன் கணனி, மற்றும் தட்டச்சுப் பயிற்சிகளையும் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் — உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவன அதிபர் ரீ. ராஜரட்ணம் தெரிவித்தார். (ஐ-9)

## இன்னும் 15 நாள்களில் தளபாட வசதி கிடைக்கும்

யாழ்ப்பாணம், மே 22

யாழ். உயர் தொழில் நுட்பக் கல்வி நிறுவனத்துக்குத் தேவையானதளபாடங்களை இன்னும் 15 நாள்களில் பெற்றுத் தருவதாக ஈ.பி.டி.பி. அமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிவதாசன் உறுதியளித்துள்ளார்.

யாழ். உயர் தொழில் நுட்பக் கல்வி நிறுவனம் புதிய கட்டடத்தில் இயங்க உள்ள போதும் அதற்குத் தேவையான தளபாடவசதிகள் இதுவரை கிடைக்கவில்லை.

தொழில் நுட்பக் கல்லூரி, சில பாடசாலைகள் ஆகியனவற்றில் இருந்து தற்காலிகமாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட தளபாடங்களைப் பயன் படுத்தியே புதிய கட்டடத்தில் வகுப்புகள் ஆரம்பிக்கப்பட உள்ளன.

இப்பிரச்சினைகள் தொடர்பாக ஈ.பி.டி.பி. அமைப்பினருக்கு முறைப்பாடு செய்ததையடுத்தே தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்துக்கு ஒதுக்கப்பட்ட 40 லட்சம் ரூபாவுக்கு புதிய தளபாடங்களை இன்னும் 15 நாள்களுக்குள் பெற்றுத் தருவதாக சிவதாசன் உறுதியளித்துள்ளார். (ஐ-9)

தெல்லிப்பழை
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரையுள்ளது)

பொறியியலாளர்/ தொழில் நுட்பவியலாளரை
**பதிவு செய்தல்**

இச்சங்கத்தால் மேற்கொள்ளப்படவுள்ள குடியியல் ஒப்பந்த வேலைகள், கட்டடத் திருத்தங்கள் என்பனவற்றிற்கு பகுதி நேர அடிப்படையில் கணியச் சிட்டைகள், மதிப்பீடுகள் தயாரித்து சமர்ப்பிக்கவும், வேலைகளை மேற்பார்வை செய்யவும் தகைமையுள்ள பொறியியலாளர்/ தொழில் நுட்பவியலாளர்களை பதிவு செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இவ்விதம் பதிவு செய்யப்படுபவர்களின் சேவைக்கான அழைப்பு தேவையேற்படும் பொழுது விடுக்கப்படும்.

சேவைக்கான கொடுப்பனவு வேலை அளவு (Piece Rate) அடிப்படையில் வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் 31 - 05 - 1998 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

மேலதிக விவரங்களை சங்கப்பணிமனையில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பொது முகாமையாளர்

துர்க்காபுரம்,
தெல்லிப்பழை.

(சி-3793)

**அழைப்பு**

யா/ சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலையில் கற்று 1990 -க்குப் பின் வெளியேறிய மாணவர்களை எதிர்வரும் **27 - 05 - 98** புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்குத் தவறாது வித்தியாசாலையில் நடைபெறும் கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அதிபர்
யா/சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம்
சுன்னாகம்.

(சி/3795)

## விபத்தில் பாதசாரி காயம்

யாழ்ப்பாணம், மே 22

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி, நவீனசந்தைப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் காயமடைந்தார்.

பாதசாரியான, நவக்கிரியைச் சேர்ந்த திருஞானம் பராசக்தி (வயது 40) என்பவரே காயமடைந்தவராவார். இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மகளின் பூப்புனித நீராட்டு விழாவிற்காக பொருள்கள் வாங்க வந்த இடத்திலேயே இச்சம்பவம் இடம்பெற்றதாக அவர் கவலையுடன் தெரிவித்தார். (ஐ-15-139)

**தமிழ் /ஆங்கில தட்டெழுத்தாளர்கள் தேவை**

சுன்னாகத்தில் புகழ்பெற்ற நீதினி ஸ்தாபனத்துக்கு தமிழ்/ ஆங்கில தட்டெழுத்தாளர்கள் இருபாலாரும் தேவை. விண்ணப்பத்துடன் நேரில் வரவும்.

**துர்க்கா ஸ்ரேஷனேர்ஸ்,**
பஸ்நிலையம், சுன்னாகம்.

(சி-3794)

## தையற் பயிற்சி

சுன்னாகம், மே 22

யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபையின் மகளிர் குழுவினர் உரும்பிராயில் தையற் பயிற்சிவகுப்புக்களை நடத்தவுள்ளனர். எதிர்வரும் 23 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு கற்பகப் பிள்ளையார் கோயிலுக்கு முன்பாக உள்ள வெங்காயச் சங்க மண்டபத்தில் இப்பயிற்சி வகுப்பு நடைபெறுமெனத் தெரிவிக்கப்பட்டது. (உ-27)

**3 ஆம் மாத நினைவஞ்சலி**



தாயின் மடியில
11 — 06 — 1973

இறைவன் அடியில்
11 — 03 — 1998

திருமதி
யோ. வலன்ரைன் றொமின் அன்ரனிற்ரா

''உயிரோடு இருக்கும் போது என்னிடம் நம்பிக்கை கொள்ளும் எவரும் என்றுமே சாகமாட்டார்.''
(யோவான் 11-26)

யாழ். ண்ணில் பிறந்து நோர்வே நாட்டில் மடிந்து போன எங்கள் செல்வம் யோ. வலன்ரைன் றொமின் அன்ரனிற்ராவை பாசத்துடன் நினைவு கூரும்.

அன்புக் கணவன், மகள்,
பெற்றோர், சகோதரர்கள்,
மாமா, மாமி,
மைத்துனிமார், மைத்துனர்கள்.

ஆசீர்வாதப்பர் கோயில்,
கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

(56147)

## மெய்வல்லுநர் திறனாய்வு

நெடுந்தீவு, மே 22

தீவுப்பகுதி தெற்கு பிரதேச செயலக விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமையும் நாளை சனிக்கிழமையும் நயினாதீவு ஸ்ரீகணேச மகாவித்தியாலயத்தில் வேலணை பிரதேசச் செயலர் செ. இரத்தினம் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கமும், கௌரவவிருந்தினர்களாக ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகம், நெடுந்தீவுஉதவி அரசாங்க அதிபர் நா. இராமச்சந்திரன், வேலணை கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் வ. நிமலநாதன் ஆகியோரும், சிறப்பு விருந்தினராக வேலணை முன்னாள் உதவி [illegible] ராசாவும் கலந்து கொள்ளுவார்கள். (ஐ-111)

பாரம்பரிய கலைகள்
மேம்பாட்டுக் கழகம்
நடத்தும்

**இசைநாடக நாட்டுக்கூத்துப் போட்டி**

கட்டம் 2
இசை நாடகம்

★ இலவசம் ★ இலவசம்

விளக்கேற்றி ஆரம்பம்
பிரதம விருந்தினர்
பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
(உபவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்)
சிறப்பு விருந்தினர்
வைத்திய கலாநிதி ஏ. உமாகாந்தன்
நாயன்மார்கட்டு

நாள்: மே 23, 24, 31
இடம்: யா/இந்து மகளிர் கல்லூரி

பங்கு கொள்ளும் மன்றங்கள்

23 - 05 - 1998 சனிக்கிழமை

10. 00-11. 00 – விசுவாமித்திரன் சபதம் கொழும்புத்துறை இந்து ம. வி.
11. 45-12. 45 – அரிச்சந்திர மயானகாண்டம் தைரியநாதன் குழுவினர்
1. 30 – 2. 30 – அரிச்சந்திர மயானகாண்டம் பண்ணாகம் அண்ணா கலாமன்றம்
2. 45 – 3. 45 – 'சத்தியவேள்வி' - புனித மரியாள் வித்தியாலயம், O. L. R. யாழ்ப்பாணம்.
4. 00 – 5. 00 – 'பக்தநந்தனா', இணுவில் கந்தசாமி கோயில் தொண்டர் சபை

24 - 05 - 1998 ஞாயிற்றுக்கிழமை

10. 00-11. 00 – 'சத்தியவான் சாவித்திரி' இராமநாதன்கல்லூரி, மருதனார்மடம்
11. 15-12. 15 – அரிச்சந்திர மயானகாண்டம் தென்கரவை கலைமதி நாடக மன்றம்
1. 30 - 2. 30 – நல்லதங்காள்-வேலாயுதம் குழுவினர், கரவெட்டி
2. 45 - 3. 45 - அரிச்சந்திர மயானகாண்டம் வேலாயுதம் குழுவினர், கரவெட்டி
4. 00 – 5. 00 – மயான காண்டம் - இரத்தினகுமார் குழுவினர் – பளை

31 - 05 - 1998 ஞாயிற்றுக்கிழமை

10. 00-11. 00 – அரிச்சந்திர மயான காண்டம் காங்கேசன்துறை வசந்தகானசபை அரியாலை
11. 15-12. 15 - பூதத்தம்பி நடிகமணி கலாமன்றம் சுன்னாகம்
1. 30 - 2. 30 - ஸ்ரீவள்ளி - சமரபாகு நியூட்டன் கலாமன்றம், வல்வெட்டித்துறை
2. 45 – 3. 45 – 'நந்தனார்' – பத்மா கலாமன்றம், அரியாலை

சிறந்த முறையில் மேடையேற்றி ஒலி, ஒளிப் பதிவு செய்து ஆவணப்படுத்தப்படும். ரசிகர்கள் இலவசமாகப் பார்த்து ரசித்துக் கொள்ளத் தவறாது சமுகந் தரவும்.

பாரம்பரிய கலைகள்
மேம்பாட்டுக் கழகம்.

(56151)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பிறிமா பிறவுண் ஒரு நாள் பேட்டுக்குஞ்சும், 60 நாள்கள் நிரம்பிய வயதுடைய குஞ்சும் விற்பனைக்குண்டு. தேவையானவர்கள் யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலியில்தொடர்பு கொள்ளவும். [சி/3779]

கொழும்பில் இருந்து கொண்டுவரப்பட்ட நஷனல் G. 15 — 3. 70 டெக் விற்பனைக்குண்டு. தொடர்பு: க. விஜயஜீவன், மல்வம் குறுக்குத்தெரு, 8ஆம் கிளை சங்கத்தடி (முன்பாக), உடுவில். [56162[

### இலகு திருமணசேவை

31 வயசு பூராடம் B. Sc Computor U. K. இல் வேலை புரியும் மணமகனுக்கு மணப்பெண் U. K. இல் தேவை. சகல மணமக்கள் தேர்வுக்கு தொடர்பு:ஞாயிறுகாலையில் துரைவிமலா, 958/8, K K. S. வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். [56137]

## மாணவர் ஒன்று கூடல்

தென்மராட்சி, மே 22
பளை மத்திய கல்லூரி உயர்தரவகுப்பு மாணவர்களின் ஒன்று கூடல் நிகழ்வு அண்மையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக பல்கலைக் கழக வர்த்தகத்துறை தலைவர் எஸ். தேவராசாவும், அதிசிறப்பு விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி. இராசநாயகமும், சிறப்பு விருந்தினராக பளை கோட்டக்கல்வி அலுவலர் அ. கயிலாயபிள்ளையும் கலந்து கொண்டனர். (ஐ-117)

## தேர் தரிப்பிடம் அமைப்பு

வடமராட்சி, மே 22
சரித்திரப் பிரசித்திபெற்ற வடமராட்சி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் கோயிலில் புதிதாக தேர் தரிப்பிடம் ஒன்று பல்லாயிரக்கணக்கான ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது.

இத்தேர் தரிப்பிடம் அமைப்பதற்கான அடிக்கல் தர்மகர்த்தா சபைத்தலைவர் எஸ். கந்தசாமியினால் அண்மையில் நாட்டி வைக்கப்பட்டது. (ஐ-173)

## ஆண்டு விழாவும் பரிசளிப்பும்

தென்மராட்சி, மே 22
சாவகச்சேரி சரசாலை வடக்கு சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்தினர் கடந்த வருடம் (1997) நடைபெற்ற ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற சரசாலைப் பகுதி மாணவர்களுக்கு பரிசில்களை வழங்க உள்ளனர். பரிசில் வழங்கும் வைபவமும் சங்கத்தின் 66 ஆவது ஆண்டுக் கூட்டமும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10. 00 மணிக்கு சங்கத் தலைவர் த. சபாநாயகம் தலைமையில் சரசாலை ஸ்ரீ கணேசா வித்தியாலயத்தில் நடைபெறும்.

இவ் வைபவத்திற்கு முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட உதவிக் கூட்டுறவு ஆணையாளர் செ. கு. சண்முகநாதனும், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளையும், உதவிக் கூட்டுறவு ஆணையாளர் திருமதி கோ. திருநாவுகரசுவும் கலந்து கொள்வர். (ஐ-117)

---

## நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 24 — 04 — 1917 | | 01 — 05 — 1998 |

அமரர்
### ஐயாத்துரை பஞ்சலிங்கம்
(ஓய்வு பெற்ற இ. போ. ச. சாரதி)

அன்பின் திருவுருவாய், பண்பின் உறைவிடமாய் பாசத்தின் பிறப்பிடமாய் இருந்து - எமது இதயத்தில் குடிகொண்ட எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் திடீரென எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்டதேனோ?

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் மரணச்சடங்குகளில் கலந்து கொண்டு அனுதாபம் தெரிவித்தவர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதோடு, இன்று (1998-05-22) நடைபெறவிருக்கும் கிரியைகளில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

மில் லேன், ஏழாலை மேற்கு, (56154)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்
23-05-1998



அமரர்
### சின்னத்தம்பி சோமசுந்தரம்
(பிரபல வர்த்தகர், வல்வெட்டித்துறை)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 06—05—1940 | 23—04—1998 |

எங்கள் அன்புத் தெய்வமே!
எங்கள் ஆருயிர் அன்பே!
எங்கள் எல்லோரையும் மறந்து எங்கு சென்றீர்
எங்கள் இதயத்தின் காவலரே!
தங்கள் பாசமிகு அன்பு முகத்தை இனி எப்போது காண்போம்?
எங்கள் கண்களில் கடல் போல் பெருகும் கண்ணீர் அஞ்சலி தங்களுக்கே.

தங்கள் ஆத்மா சாந்தியடைய எங்கள் குலதெய்வமாகிய வல்வை வைத்தீஸ்வரப் பெருமானை வேண்டுதல் செய்கிறோம். 23 - 05 - 98 இல்நடைபெறும் மதிய போசன வைபவத்திலும் பங்கு பற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம்சாந்தி! சாந்தி! சாந்தி!

தங்கள் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்

அ. மி. பாடசாலை ஒழுங்கை,
வல்வெட்டித்துறை. [56105]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

---

## தேவை

நல்ல நிலையிலுள்ள குளிர்சாதனப் பெட்டி (DEFREEZER) தேவை. விற்பனை செய்ய விரும்புபவர்கள் தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க அலுவலகத்தில் தொடர்பு கொள்ளவும்.

பொது முகாமையாளர்.

துர்க்காபுரம்,
தெல்லிப்பழை. (சி/3792)

---

## கொம்பியூட்டரில் றோணியோ

கொம்பியூட்டர் கட்டிங்கில் தமிழ், ஆங்கில றோணியோ வேலைகளை சிறந்த முறையில் குறித்த தவணையில் செய்து கொள்ள:

### கங்கை றோணியோ
(பிறவுண் றோட் அண்மையில்)
நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
(56158)

---

யாழ்.பேராதனை
G. A. Q., B. A.
வினாத்தாள் பற்றிய விசேட பயிற்சி
பொருளியல்: பிரபல விரிவுரையாளர்
தமிழ்: சொக்கலிங்கம் M. A.
ஆரம்பம்: 23—05—98
மு. ப. 8-00 மணி

### பேராதனைக் கல்வி நிலையம்
பலாலி வீதி, கந்தர்மடம்சந்தி.
(56157)

---

## ஓராண்டு நினைவலைகள்

### அமரர் கு. விஜயசிறிராஜா
(முன்னாள் பிரதம லிகிதர், இலங்கை மின்சாரசபை)

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 01-06-1931 | 22-05-1997 |

உடலால் எமை விட்டுப் பிரிந்தாலும் உணர்வோடு எம்முடன் வாழும் எம் இதயத் தெய்வமே! நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டொன்று சென்றிடினும் உங்கள் நினைவுகள் எம்மனதை விட்டு நீங்காது! உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

குடும்பத்தினர்.

'சிறி மலரகம்',
வதிரி, கரவெட்டி. (56015)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| அன்னை மடியில் | | ஆண்டவர் பாதத்தில் |
|---|---|---|
| 24 — 08 — 1981 | | 23 — 04 — 1998 |

செல்வன்
### குமரகுரு கவாஸ்கர்

கர்த்தருக்குள் இரட்சிப்பைக்கண்டு கொள்ள எங்களை வழி நடத்தி, 17 ஆண்டுகள் எங்கள் செல்லப் பிள்ளையாகவும், செல்வப் பிள்ளையாகவும் வாழ்ந்து, பரலோகம் சென்ற எங்கள் மகனின் 31 ஆம் நினைவுநாள் அஞ்சலி, 22 - 05 - 98 வெள்ளிக்கிழமை காலை 10-30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அன்று மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்களை அன்புடன் அழைக்கின்றோம். அத்துடன் இறுதி நேரத்தில் எமக்கு உதவிய போதகர்கள், ஊழியக்காரர்கள், விசுவாசிகள், அயலவர்கள், உறவினர்கள் அனைவருக்கும் எமது நன்றியைச் செலுத்துகின்றோம்.

குமரகுரு குடும்பத்தினர்.

240, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி. (56114)

# உதயன்

## தாமதம் ஏன்?

அகில இலங்கை ரீதியாக பயிலுநர் ஆசிரியர்களுக்கு கடந்த வருடம் ஜூலை மாதத்தில் சம்பள உயர்வு வழங்கப்பட்டது. மாதம் இரண்டாயிரம் ரூபாவாக இருந்த சம்பளம் 2.500 ரூபாவாக உயர்த்தப்பட்டு தென்னிலங்கையைச் சேர்ந்த பயிலுநர் ஆசிரியர்கள் குறிப்பிட்ட மாதம் தொடக்கம் அதனைப் பெற்று வருகின்றார்கள்.

ஆனால் வடக்கு — கிழக்கு மாகாண சபையின் நிர்வாகத்துக்கு உட்பட்ட சில மாவட்டங்களைச் சேர்ந்த பயிலுநர் ஆசிரியர்களுக்கு அந்தச் சம்பள உயர்வு கிடைக்கவில்லை. சில மாவட்டங்களில் வழங்கப்பட்டிருக்கிறது; ஆனால் குறைந்த தொகையே கொடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு — கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களம் ஆகியவற்றின் கவனயீனமான, அக்கறையற்ற நிர்வாகப் போக்கே இதற்குக் காரணம் என்று தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த. மகாசிவம் குற்றம் சுமத்தியுள்ளார்.

அவரது குற்றச்சாட்டுச் சரியானதே. வடக்கு – கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் நிர்வாகத் திறமை இன்மைக்கும் இது நல்லதோர் எடுத்துக் காட்டாகும்.

ஏனைய மாகாணங்களில் சம்பள உயர்வு உரிய மாதத்தில், உரிய அளவில் வழங்கப்பட்டது என்றால், வடக்கு — கிழக்கு மாகாண கல்வியமைச்சில் மட்டும் குளறுபடிகள், சீரின்மைகள் உண்டாகக் காரணம் என்ன?

ஆளணிப் பற்றாக்குறை, நிதிவளம் குறைவு என்று ஏதோ ஒரு காரணத்தை — நொண்டிச் சாட்டை — கூறி சமாளித்துவிட முனையலாகாது.

நிர்வாகத்தில் திறமை இருப்பதாகவும், தமது அமைச்சின் கீழ், திணைக்களத்தின் கீழ் அடங்கும் சேவையாளர்களின் நலனில் அக்கறை உண்டு என்றும் அதிகாரி எவரும் வாயாடினால், சவடால் பண்ணினால் போதாது. அதனைச் செயலில் காட்டவேண்டும்.

மேற்படி சம்பள அதிகரிப்பு விடயத்தில் ஒரு சில நாள்கள் அல்லது இரண்டொரு மாதம் தாமதம் ஏற்பட்டிருந்தால் வேலைப்பளு அல்லது ஆளணிக் குறைவு என்ற காரணங்களால் நியாயப்படுத்தலாம்.

சுமார் ஒரு வருடமாக யாழ்ப்பாணம் உட்பட்ட பல மாவட்டங்களைச் சேர்ந்த பயிலுநர் ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வுப் பணம் கைக்கு வந்து கிடைக்கவில்லை.

இன்றைய வாழ்க்கைச் செலவில் குறிப்பிட்ட சம்பள உயர்வு சம்பந்தப்பட்டவர்களுக்கு உடனே கிடைத்திருக்க வேண்டும். அதனைத் தாமதப்படுத்தியது பெரும் அநியாயமும் மனிதாபிமானமற்ற செயலுமாகும்.

அதனை உடனே வழங்குவதற்கான நடவடிக்கைகளை வடக்கு — கிழக்கு மாகாண கல்வி அமைச்சு மேற்கொள்ளவேண்டும்.

அமைச்சில், திணைக்களத்தில் பணி புரியும் கீழ் மட்ட உத்தியோகத்தர்கள் தாமதம், தவறு செய்தால் பெரிய அதிகாரிகள் உடனே விசாரணை, தண்டனை என்பார்கள். பெரிய அதிகாரிகளே தாமதம் செய்தால் அல்லது தவறு செய்தால் கேட்பார் எவரும் இல்லை என்ற நிலை ஆகக் கூடாது.

# மனிதனின் இகவாழ்வுக்கு அச்சாணி நம்பிக்கை என்னும் பெரும் சொத்தே

இயல்பாகவே ஆசைக்கும், சுகத்துக்கும் ஆட்பட்டவன் மனிதன்.

அவன் விரும்பும், ஆசையும், சுகமும் வாழ்க்கையில் அவனுக்குப் பிடிப்பை ஏற்படுத்துகிறது. வாழ்க்கையில் மனிதனுக்குப் பிடிப்பு ஏற்படும்போது நம்பிக்கை மிகுந்தவனாகின்றான்.

நம்பிக்கைதான் மனிதனது இகவாழ்வுக்கு வண்டியின் அச்சாணி போன்றதாக அமைகிறது. அவன் நம்பிக்கை இழக்கும்போது தன்னைத் தானே மாய்த்துக்கொள்ளும் அளவுக்கு மனவலிமையை இழந்துவிடுகிறான். மனவலிமையை இழக்காது தோல்விகளைத் தாங்கிக்கொண்டு மீண்டும் வாழவேண்டும் என்ற துடிப்போடு இயங்குகிறவர்களும் உண்டு.

இப்படிப்பட்ட இருசாரார்களுமே வாழ்க்கை வாழ்வதற்கே என்ற அடிப்படைத் தத்துவத்தைப் புரிந்துகொண்டவர்களில்லை. இந்த அடிப்படைத்தத்துவத்தைப் புரிந்துகொண்டால் இகவாழ்வில் வெற்றியைக்கண்டு பெருமிதமடையாமலும், தோல்வியைக்கண்டு துவளாமலும் மிதமாக வாழக்கற்றுக்கொள்வான்.

மிதமான வாழ்க்கை சீராகச் செல்லும். சீராகச் செல்லும் வாழ்வில் துன்பமில்லை. துன்பமில்லாத வாழ்வில் தோல்வியில்லை. தோல்வி இல்லாத வாழ்வு இன்பமயமாகும்.

இந்த இன்பமயமான வாழ்வைப் பெறுவதற்கு மனிதன் மனவுறுதியுடன் வாழக்கற்றுக் கொள்ளவேண்டும். மன உறுதியுடன் இருக்க ஞான வாழ்க்கையைப் பின்பற்ற வேண்டும்.

ஞான வாழ்க்கையை அவன்

**ஞானக் கதிர்**

பின்பற்றத்தொடங்கும் போது ஒருகையால் உலகத்தையும், மறுகையால் இறைவனையும் பற்றுகிறான். பேரின்பத்தையும், சிற்றின்பத்தையும் சேர்த்துப் பற்றவும் அவன் எப்போதும் முயல்கின்றான்.

உலக இன்பங்களில் உள்ள இனிமையினால் அவனுக்கு அவைகளை விடமனம் விடுவதில்லை. அவைகளை விடுவதனால் தன்வாழ்வே பாழாகிவிடும் எனத் தோன்றுகிறது.

இப்படிப்பட்ட எண்ணங்கள் மனதிலே எழுந்து அந்த எண்ணங்கள் தன்னையே வஞ்சிப்பதைப் பாவம் அவன் உணர்வதில்லை. உணராத காரணத்தால்தான் இவன் தன்கண்களை மூடிக்கொண்டு இறைவனது உண்மைகளை அறியாது நிற்கிறான்.

எவன் ஒருவன் இறைவனது உண்மைகளை, அடியார்க்கு அருளும் வள்ளல் தன்மையை அறிந்து இறைவனை அடிதொழுகிறானோ அவன் இறைவனின் அன்புக்கு இலக்காகிறான்.

உலகப் பொருள்களால் இன்பம் அடையலாம் என்ற தவறான கருத்து நீங்க வேண்டும். அது கானல் நீரைக் குடித்துத்தாகத்தைத் தீர்க்க நினைப்பது என்கின்ற எண்ணம் மனதில் உதயமாக வேண்டும்.

இப்படிப்பட்ட எண்ணம் மனதில் உதயமாகும் போது, ''எல்லாம் உன் செயல்; நீயே கதி; அடியேன் உன் அடைக்கலம்; காத்தருள்க'' என்று ஒருவன் உண்மையாக இறைவனிடத்தில் சரணடைவான். அவன் சரணடையும் போது இறைவன் அவனை அவரது அன்புக்கும் அருளுக்கும் உகந்தவனாக்கிக் கொள்கிறார். அவனது அருளே தம்மை ஆட்டி வைக்கும். அதை உணராது போக முடியாது.

பிறவிக் கடலில் தாம் மூழ்கும் போது அவர் தம்மைக் கைதூக்கி விட்டார். இந்த நினைவு நெஞ்சில் எழும். அப்போது அன்பு பெருகும். நன்றி நம்மை உயர்த்திக் காட்டும்.

இப்போது இறைவனை எப்போது நினைக்க வேண்டும் என்ற எண்ணத்தைப் பிறர் கூற வேண்டுமென்ற அவசியம் எதற்காக வருகிறது?

இறைவனை இதயத்துள் வைத்திருக்கும்போது எப்படி மறந்திட முடியும். இதயத்துள் இறைவன் இருக்கின்றான் என்ற உணர்வு புதிய உற்சாகத்தை ஏற்படுத்துகிறது. நாம் எண்ணுவதெல்லாம் நடக்கும் என்ற நம்பிக்கை எழுகிறது.

உத்வேகமாக இறைவனிடத்தே அன்பு கொள்ளச் செய்கிறது, நினைப்பதெல்லாம் நிறைவேறும் என்கின்ற எண்ணம்.

[நன்றி: திருக்கோயில்]

# கட்டொழுங்கின் ஊடே கல்வி என்ற கோட்பாட்டுடன் "எக்ஸ்பிறஸ்"

## வெள்ளி விழாக் காண்கிறது

> கோப்பாய், இருபாலையில் உள்ள ''த எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்'' நிறுவனம் தனது வெள்ளிவிழாவை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை கொண்டாடுகிறது.
>
> வெள்ளிவிழா சிறப்பு மலராக ''ஏணி'' என்ற சஞ்சிகையும் வெளியிடவுள்ளது.
>
> தமது கல்வி நிறுவனத்தின் நோக்கம், சேவை, வளர்ச்சி குறித்து அதிபர் திரு. தம்பிப்பிள்ளை வரதராஜா வரைந்த குறிப்பு இங்கே பிரசுரமாகிறது.

"இது நான் வீட்டில் நாட்டிய ரோஜாச் செடிதான், ஆனால் அது ஆலயத்தின் மதிற்சுவர்களைக் கடந்தும் அர்ச்சனைக்கு ஆயிரம் பூக்களைக் கொடுக்கிறது.''— இது ஓர் ஆங்கிலக் கவிஞனின் பாடல்வரி. இந்தவிதமான மகிழ்ச்சிப் பிரவாகத்தோடுதான் இந்த வெள்ளிவிழா மலருக்கு எனதுகருத்துரையைச் சமர்ப்பிக்கின்றேன். நான் அதிபர் தான்; ஆனால் அது ஓர் அப்பிராயம்.

அன்பு நிறைந்த மாணவ உலகமும், ஆர்வலர்களும், பக்கபலமாக இருக்கின்ற ஆசிரியர் குழாமுந்தான் வெள்ளிவிழாவின் புகழுக்கும் பெருமைக்கும் உரியவர்கள். இந்த விழா நிகழ்வை சிறப்பாகக் கொண்டாட வேண்டும் என்று என்னைத் தூண்டியவர்களும் அவர்கள்தான். எனவே பெருமையும் புகழும் அவர்களுக்குச் சமர்ப்பணம்.

''நோக்கம் புனிதத் தன்மையை இழந்தால் நடைமுறைகள் வளர்ச்சியை மழுங்கடிக்கும்'' இந்த மகுடவாசகம் என் மனதில் ஆழப்பதிந்தது. ஆகவே ''எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்'' ஆரம்பிக்கப்பட்ட அன்றே ஊதியம் மட்டும் நோக்கமாகக் கொள்ளப்படவில்லை. உண்மை, சேவை, உழைப்பு, ஊதியம் என்ற அடிப்படையிலே இந்தக் குழந்தையை நான் வளர்த்தெடுத்தேன். ''நியாயமற்ற சிவபக்தி, நேர்மையற்ற வாணிபம், கட்டொழுங்கில்லாத கல்வி, இவைகள் பயனற்றன'' என்றார் காந்திஜீ.

எனவே என்று இந்நிலையம் கால்கோளாயிற்றோ! அன்றே மாணவர் கட்டொழுங்கிற்கும் வித்திடப்பட்டது. இதனை நீங்கள் கண்கூடாகக் கண்டிருப்பீர்கள். இந்த வழியிலே வளர்பிறை போல் வளர்ந்து இன்று வெள்ளிவிழாவையும் கொண்டாடுகிறது. இந்த மகிழ்ச்சியில் உங்களுடன் நானும் ஒருவனாக கலந்து கொள்வதில் பெருமைஅடைகின்றேன்.

பொதுவாக தனியார்கல்வி நிலையங்கள் மாணவரைச் சிந்திக்கும் செயலற்ற உயிரிகளாகவும், ஒழுக்கம்குலைந்த பிரசைகளாகவும் ஆக்கிவிடுகின்றன என்பது பல புத்திஜீவிகளது கருத்து. அதில் உண்மைகள் இல்லாமல் இல்லை. ஆனால் இவ்விடயத்தில் விதிவிலக்கான சில நிறுவனங்களுள் எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்டும் ஒன்று என்பதை அடித்து ஆணித்தரமாகச் சொல்லமுடியும்.

''கட்டொழுங்கின் ஊடே தான் கல்வி'' என்பதில் இருந்து எமது நிறுவனம் என்றுமே தவறியதில்லை. ''வேலி தாண்டும் வெள்ளாடுகள் ஆயிரம் வேண்டாம், பாதை வழியே போகும் பத்து ஆடுகள் போதும்'' இது எக்ஸ்பிறசின் தாரக மந்திரம். இனிமேலும் இவ்வழியில் தவறப்போவதில்லை. சித்தாந்தங்கள் பல இருக்கலாம். கோட்பாடுகள் கோடி இருக்கலாம். ஆனால் நடைமுறைக்கு ஏற்றனவே இங்கு பரிசீலிக்கப்படும். மாணவர்கள் விரும்புகின்ற எல்லாவற்றையும் நாங்கள் கொடுப்பதற்குத் தயாராக இல்லை.

ஆனால் அவர்களது உயர்வுக்கு எவை வேண்டுமோ அவைகள் ஒருபோதும் இங்கு அடைக்கப்படவில்லை. கலை விழாக்களோ, விளையாட்டுப்போட்டிகளோ, கல்விச் சுற்றுலாக்களோ, ஆலயப் பூஜை வழிபாடுகளோ எத்தனை உண்டோ அத்தனையும் இங்கு மாணவர்களுக்காக ஆக்கிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

அஜந்தா ஓவியங்கள் கூட புனருத்தாரணம் செய்யப்படுகின்றன. அந்த வகையில் நவீன உலகின் விஞ்ஞான மாற்றத்திற்கேற்ப கல்வி முறையில் எமது நிறுவனமும் புதிய புதிய கற்பித்தலைச் செய்ய ஒரு போதும் பின்னிற்க மாட்டாது. தற்போதைய ''இன்ரநெற்'' எனப்படும் கணனிப் பொறிமுறைக் கல்வியைக் கூட அறிமுகம் செய்வதற்கான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கின்றேன்.

''காசு பெரிதல்ல நெஞ்சிலுள்ள காதல் பெரிதெனக்கு'' ''சென்றிடுவீர் எட்டுத்திக்கும் கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்'' என்ற பாரதியின் கூற்றைப் பொருளாக மதிக்கின்றேன். அதனை இந்நிறுவனத்தில் நடைமுறைப்படுத்தஎண்ணியிருக்கின்றேன். அதற்கு எல்லாம் வல்ல கற்பக விநாயகனின் ஆசியும், அருளும் உங்கள் அன்பும் எனக்கு நிச்சயம் கிடைக்கும்.

இது உங்கள் நிறுவனம். உங்கள் பிள்ளைகள் உயர வேண்டும். நீங்கள் பெருமை பெறவேண்டும். நிறுவனம் வாழ வேண்டும், ஊர் ஓங்க வேண்டும், நாடு சிறக்கவேண்டும்.

''எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதல்லால் வேறொன்றும் அறியேன் பராபரமே'' என்ற தாயுமானவரின் வாக்கு இந் நிறுவனத்தாற் செழிக்க வேண்டும் என்பது எனது கலையாத ஆசையாகும்.

### உதயவாக்கு

எண்ணிய எண்ணம் நல்லதாயினும் கெட்ட தாயினும் அது எண்ணியவனிடத்தே திரும்பி வந்து சேருகிறது.

இராமகிருஷ்ண பரமஹம்சர்

### நாளை

வைகாசி - 09

சனிக்கிழமை

திதி: துவாதசி
முற்பகல் 08.35 வரை.

நட்சத்திரம்: அச்சுவினி
பின்னிரவு 3.37 வரை

சனிப்பிரதோஷ விரதம்
சுபநேரம்: 02.52 -04.22
ராகுகாலம்: 08.52 -10.22
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# பங்கீட்டு அட்டை மீளாய்வு

சண்டிலிப்பாய், மே 22

சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் நிரந்தரமாக வசிக்கும் குடும்பங்களி[illegible]னதும், தற்காலி[illegible] வசித்து வரும் கு[illegible]னதும் 'அ', 'இ' [illegible] கீட்டு அட்டைக[illegible] செய்யப்படவுள்[illegible]

நிரந்தரமாக [illegible] களுக்கு 'அ' [illegible] தற்காலிகமாக [illegible] களுக்கு (இடம்[illegible] களுக்கு) 'இ' [illegible] மாத வருமான[illegible] வுக்குமேல் பெ[illegible] 'உ' அட்டை[illegible] படவுள்ளன. [illegible] பான முழுவி[illegible] அடங்கிய சுற்ற[illegible] கிராம அலுவல[illegible] பிரதேச செயல[illegible] இவ்வாரம் அனுப்[illegible] பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாமதமாக முத்திரை விநியோகம்
# நல்லூரில் 150 குடும்பங்கள் நிவாரணப் பொருள்களை இழந்தன

யாழ்ப்பாணம், மே 22
நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் குறிக்கப்பட்ட திகதிக்குள் உணவு முத்திரை நிவாரணத்தைப் பெற்றுக் கொள்ளவில்லை என்று கூறி 150 குடும்பங்களுக்கு உணவு முத்திரைக்குரிய நிவாரணப் பொருள்கள் வழங்கப்படவில்லை.

உணவு முத்திரைகள் தாமதமாக வழங்கப்பட்டதினாலே ப.நோ.கூ. சங்கங்களினால் விதிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் உணவு முத்திரை நிவாரணம் பெற முடியாத நிலை இக்குடும்பங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

உணவு முத்திரைக்கான பொருள் விநியோகம் நிறுத்தப்பட்டதால் பாதிக்கப்பட்ட மக்கள் யாழ். செயலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

யாழ். செயலகத்திற்கும், நல்லூர் பிரதேச செயலர் அலுவலகத்துக்குமாக சம்பந்தப்பட்டோர் அலைந்து திரிகிறார்கள். (ஐ-5)

## திக்கம் வடிசாலை இன்று முதல் இயங்கும்

அரியாலை, மே 22
திக்கம் வடிசாலை இன்று வெள்ளிக்கிழமை முதல் செயற்படவுள்ளது.

இவ்வடிசாலையை மீளவும் ஆரம்பிப்பதற்கானபூர்வாங்க ஏற்பாடுகள் நிறைவு பெற்றிருப்பதாக யாழ். கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள பனை தென்னை வள அபிவிருத்தி சபையினர் தெரிவித்தனர்.

வடிசாலைக்கான இயந்திர உபகரணங்கள் கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டுதற்போது பொருத்தப்பட்டுள்ளன.

திக்கம் வடிசாலை ஆரம்பிக்கப்படுவதைஅடுத்துயாழ். மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் கள்ளை வீண் விரயமாக்காமல் பனஞ்சாராயத்துக்கு பெற்றுக்கொள்ள வசதி ஏற்பட்டுள்ளது. (ஐ-17)

## கல் பறித்து நீண்டகாலம்; வீதிகள் திருத்தப்படவில்லை

வடமராட்சி, மே 22
வடமராட்சிப் பிரதேசத்தில் பல சிறு வீதிகளை திருத்தவென கற்கள் பறிக்கப்பட்டு வருடக்கணக்காகியும் இன்னமும் வீதிகள் திருத்தப்படவில்லை.

இங்குள்ள பல சிறுவீதிகளைத் திருத்துவதற்கு வீதி அபிவிருத்திதிணைக்களம் கற்களைப்பறித்து வீதிக்கரைகளில் குவித்துள்ளது.

சேதமடைந்த இவ்வீதிகள் சிலவற்றில் நடுவீதியிலும் கற்கள் குவிக்கப்பட்டுள்ளதால் அவ்வீதிகளால் பயணம் செய்வோர் பெரும் இடைஞ்சல்களை எதிர்நோக்க வேண்டி நேரிடுகிறது. (ஐ-173)

## நல்லின விதை நெல் வழங்க ஏற்பாடு

திருநெல்வேலி, மே 22
யாழ். மாவட்டத்தில் எதிர்வரும் காலபோக நெற்செய்கையில் ஈடுபடவிருக்கும் விவசாயிகளுக்கு நல்ல இன விதை நெல் வர்க்கங்களை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என்று விவசாயத் திணைக்களத்திடம் யாழ். கமநலச் சேவைகள் திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளது.

விவசாயத் திணைக்களத்திடமிருந்து உரிய நேரத்தில் விதை நெல் பெற்றுக் கொள்ளப்பட்டால் விவசாயிகளுக்கு அதனை உடன் விநியோகிக்க முடியும் என்று யாழ். கமநலச் சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் தெரிவித்தார்.

கடந்த 1997 – 98 காலபோகத்தில் நெல் விளைச்சல் ஓரளவு திருப்திகரமாக இருந்த காரணத்தினால் பெரும்பாலான விவசாயிகள் தங்களுக்குத் தேவையான விதை நெல்லை ஒதுக்கி வைத்திருப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே விதைநெல் தேவைப்படும் விவசாயிகள் இம்மாவட்டத்தில் விதை நெல் மிகுதியாக உள்ள இடங்களிலிருந்து பெற்றுக் கொள்ள முடியும். தத்தமது பிரிவு விவசாய சம்மேளனங்கள் ஊடாக நெல் விளைச்சல்அதிகமுள்ள பகுதிகளிலுள்ள விவசாய சம்மேளனங்களுடன் தொடர்பு கொண்டு தேவையான விதை நெல்லை நேரகாலத்துடன் விண்ணப்பித்து பெற்றுக் கொள்ளுமாறு யாழ். கமநலச்சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (ஐ-135)

## சாயி நிலையத்தில் ஆங்கிலப் பயிற்சி

உருமபிராய், மே 22
ஊரெழு கிழக்கு ஸ்ரீபகவான் சத்தியசாயி நிலையத்தில் இலவச ஆங்கில வகுப்புகள் நடைபெறுகின்றன. கிழமையில் இருநாள்கள் நடைபெறும் இவ்வகுப்புகளில் ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்குரிய இலக்கணம் கற்பிக்கப்படுவதுடன், கடந்தகால வினாத்தாள்களுக்கு விடையெழுதும் பயிற்சியும் இடம் பெறுகிறது, (ஐ-154)

## கசிப்பு கலந்து சாராயம் விற்றவர் சிக்கினார்!
### நவாலியில் சம்பவம்

நவாலி, மே 22
நவாலியில் போலிச்சாராயம் தயாரித்து விற்பனை ...வர் படையினரிடம் அகப்பட்டுக் கொண்டார்.

நவாலியின் ஒரு பகுதியைச் சேர்ந்த நபரொருவர் ...பக் காய்ச்சி அதற்கு சாயத்தைக் கலந்து உண்மை சாராயம் எனக் கூறி விற்பனை செய்து வந்துள் ... இத்தகவல் நவாலி படையினருக்கு கிடைத்ததை ... அப்பகுதிக்கு விரைந்த படையினர் அங்குள்ள ...ன்றில் கொள்கலனிலிருந்த கசிப்பினைக் கைப்பற்றி ... சம்பந்தப்பட்ட நபரை விசாரணைக்குட்படுத்தி...

இதேவேளை —
நவாலி கிழக்குப் பகுதியில் வீடொன்றில் வைத்து ...பு விற்பனை செய்து கொண்டிருந்த மற்றொரு நபரும் ...டயினரிடம் சிக்கிக் கொண்டார்.

இந்நபர் சில மாதங்களுக்கு முன்னரும் கசிப்புடன் ...டயினரால் கைது செய்யப்பட்டு எச்சரிக்கையின் ...விக்கப்பட்டவரென்று தெரிவிக்கப்படுகிறது, (ஐ-100)

## ஆதீனத்தில் இசையரங்கு

யாழ்ப்பாணம், மே 22
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மாதாந்த இசையரங்கு எதிர்வரும் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆதீன கலா மண்டபத்தில் மாலை 3–30மணிக்கு வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அதிபர் திருமதி கமலேஸ்வரி பொன்னம்பலம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் செல்வி சிவப்பிரியா வைரமுத்துவின் பாடல், குயிலுவக் கலைஞர்கள் சகிதம் இடம்பெறவுள்ளது. (ஐ-8-30)

## பொது நூலகம் இயங்கும்

திருநெல்வேலி, மே 22
கொக்குவில் மேற்கு சன சமூக நிலையத்தின் பொது நூலகத்தை மீண்டும் இயங்கச் செய்வதற்கு நிலைய நிர்வாகிகள் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-135)

## சமய சந்நிதியில்

யாழ்ப்பாணம், மே 22
தென்கோவை கற்பகப் பிள்ளையார் கோயில் மகோற்சவம் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் 6 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் ஆலய புஸ்கரணியில் தீர்த்தோற்சவமும், 8 ஆம் திகதி வசந்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (ஐ-8)

★ ★ ★

கத்தோலிக்க யாத்திரைத் தலங்களில் ஒன்றான செம்பியன் பற்று புனித பிலிப்பு நேரியார் ஆலய வருடாந்த திருவிழா கடந்த 17 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

எதிர்வரும் 26 ஆம் திகதி மாலை 5 மணிக்கு திருப்பலியும், நற்கருணை ஆராதனையும், திருச்சொரூப பவனியும், ஆசீர்வாதமும் இடம் பெறும். அன்றைய தினம் காலை 6.30 மணிக்கு திருநாள் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். (ஐ-173)

★ ★ ★

சித்தன்கேணி ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வர சேத்திர சனிப் பிரதோஷ அனுஷ்டிப்பை முன்னிட்டு நாளை சனிக்கிழமை மாலை 4 மணி முதல் சிவன், பார்வதி, நந்திகேஸ்வரர் முதலிய மூர்த்திகளுக்கு விசேட அபிடேக ஆராதனைகள் இடம்பெறவுள்ளன. (ஐ-8)

## ஜீ. ரீ. இசற் உதவியுடன் 17 நீர்விநியோகத் திட்டங்கள்

யாழ்ப்பாணம். மே 22
ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் (ஜீ. ரீ. இசற்) உதவியுடன் 17 நீர்விநியோகத் திட்டங்களுக்கான வேலைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அராலி வடக்கு, தெற்கு, சங்கரத்தை, பொன்னாலை, சுன்னாகம், நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, புங்குடுதீவு, அனலைதீவு, நயினாதீவு, வேலணை, புத்தூர் வாதரவத்தை, வல்வெட்டித்துறை, கரவெட்டி ஆகிய இடங்கள் உட்பட 17 இடங்களில் இந்த நீர் விநியோகத்திட்ட வேலைகள் பொதுமக்களின் பங்களிப்புடன்செய்யப்பட்டு வருகின்றன.

உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திணைக்களம், தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச்சபை போன்றவற்றின் அனுசரணையுடன் இந்த வேலைகள் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ-5)

## சமய அறிவுப்போட்டி

யாழ்ப்பாணம், மே 22
சித்தன்கேணி ஸ்ரீ மகா கணபதிப்பிள்ளையார் ஆலய வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக்கழகம் நடத்தும் சமய அறிவுப் போட்டிப் பரீட்சை இன்று முதல் நடைபெறவுள்ளது. (ஐ-8)

## சுக நலக் கருத்தரங்கு

சண்டிலிப்பாய், மே 22
சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள பாலர் பாடசாலைகளின் ஆசிரியருக்கான சுகநலக் கருத்தரங்கு எதிர் வரும் சனிக்கிழமையன்று மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெறவுள்ளது. (ஐ-135)


**INDUCTION SERVICE**

Rev. SURESH APPADURAI
will be inducted into the Methodist Ministry at a service
at St. Peter's Methodist Church, Jaffna
(Trimmer Hall)
On Friday the 22nd May '98
at 4 p.m. (SLT)
ALL ARE WELCOME

The superintendent Minister,
Methodist Church, Jaffna.
(56164)



**CONGRATULATIONS**

SEVAK REV. SAM ALFRED
CHRISTA SEVA ASHRAM
MARATHANAMADAM

You have spent a Fifty years of golden time in your Ministry.
Through care you gave life it's deepest significance
You showed compassion to the world by being virtuous
And your charity made you rich though you emptied
Yourself fulry to follow the footsteps of your Master.

All The Best
Rev. and Mrs Karunairaj
and the Jaffna Methodists.
(56165)



**கண்ணீர் அஞ்சலி**

எமது கல்லூரி ஆசிரியர்
திருமதி ச. சிற்றம்பலம்
அவர்களின் அன்புத்தாயார்
**திருமதி ஆறுமுகம் சோதிப்பிள்ளை**
அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
கொக்குவில் இந்துக்கல்லூரி,
கொக்குவில்.
(55414)



**கண்ணீர் அஞ்சலி**

மூன்றாம் வருட இந்துநாகரிகம் சிறப்புக்கலை மாணவன்
ப. சிவானந்தசர்மா
அவர்களின் அன்பு மனைவி
**சி. தாட்சாயினியின்**
மறைவையொட்டி அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து கண்ணீர்த் துளிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

3 ஆம்வருட மாணவர்கள், கலைப்பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.
[56171]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

தென்கோவை (இருபாலை)

**கற்பகப் பிள்ளையார் தேவஸ்தானம்**

மஹோற்சவ விஞ்ஞாபனம் - 1998

23- 5- 98 சனிக்கிழமை மு ப. 10. 30 மணிக்கு - கொடியேற்றம்

6- 6- 98 சனிக்கிழமை காலை 9 .00 மணிக்கு – தேர் உற்சவம்

7- 6- 98 ஞாயிற்றுக்கிழமை
காலை 9.00 மணிக்கு – தீர்த்தோற்சவம்
மாலை 4. 00 மணிக்கு – கொடியிறக்கம்

',மஹோற்சவ பிரதமகுரு''
சிவஸ்ரீ தி, அழகேசக் குருக்கள்
நாயன்மார்கட்டு.
'சுபம்'

ஷெ தேவஸ்தானம்

இருபாலை,
கோப்பாய்.

விளம்பர அன்பளிப்பு-

பெண்மையின் அழகுக்கு மெருகூட்டும் புத்தம் புதிய வண்ண டிசைன்களில் உங்கள் எண்ணத்திற்கு ஏற்றபடி அசல் 22 கரட்டில் ஓடர் நகைகளை குறித்த தவணையில் செய்து பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம் கைதடிச் சந்தி, கைதடி என்னும் முகவரியில் அமைந்துள்ள

**ஓம் முருகன் நகை மாடத்தினர்.**

இப்போது தங்கள் சேவையை இருபாலைச் சந்தி இருபாலை என்னும் முகவரியில்

ஓம் மகாலட்சுமி நகைமாடம்

என்னும் ஸ்தாபனத்தை ஆரம்பித்துள்ளனர் என்பதை வாடிக்கையாளர்களுக்கும் அன்பர்களுக்கும் அறியத் தருகின்றனர்.

குறிப்பு:-
உங்கள் பழைய நகைகளை தற்கால எண்ணத்திற்கேற்ப மாற்றியமைக்கவும் குறித்த நகைகளை உடன் பெற்றுக்கொள்ளவும்
நீங்கள் நாடவேண்டிய இடம்:

தலைமையகம்:
**ஓம் முருகன் நகை மாடம்**
கைதடிச் சந்தி, கைதடி.

கிளை:
**ஓம் மகாலட்சுமி நகை மாடம்**
இருபாலைச் சந்தி, இருபாலை.



(சி/3798)

## சாரணர் பயிற்சி

யாழ்ப்பாணம், மே 22
யாழ். மாவட்டச்சாரணர் கிளைச்சங்கத்தின் ஆதரவில் புதிய சாரணர் புதியபாடத் திட்டத்துக்கு அமைவான அணித்தலைவர்கள் பயிற்சி [illegible] பகல் 3 மணி முதல் நாளை மறுதினம் வரை யாழ். மத்தியகல்லூரியில் நடைபெறும். (இ-3)

## நாய்களுக்கு ஊசி

யாழ்ப்பாணம், மே 22
வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பு ஊசி ஏற்றல் இன்று காலை 9-30 மணிக்கு நாவலர் வீதியில் அமைந்துள்ள கால் நடை வளர்ப்போர் நிலையத்தில் இடம் பெறும். (இ-139)

## சனசமூக நிலைய ஆண்டு விழா

அரியாலை, மே 22
ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தின் 56 ஆவது ஆண்டு விழா நாளையும், நாளை மறுதினமும் நடைபெறும்.

மென்பந்து கிரிக்கெட் போட்டியும், கரப்பந்தாட்டப் போட்டியும் நாளை பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

நாளை மறுதினம் மாலை 2 மணிக்கு நிலையத் தலைவர் டி. ஏ. எம். குணசிங்கம் தலைமையில் ஆண்டு விழா இறுதி நிகழ்வுகள் இடம் பெறும்.

இவ்விழர்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். பிரதேச செயலர் பா. செந்தில் நந்தனன், சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட கமநல சேவை திணைக்கள உதவி ஆணையாளர், க. சுந்தரேசன், கௌரவ விருந்தினர்களாக ஈச்சமோட்டை கிராமசேவையாளர் க. பாலசிங்கம், சமாதான நீதிவான் க. சத்தியானந்தசிவம் ஆகியோர் கலந்து கொள்வார்கள். (இ-17)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மே 22
அராலி கிழக்கு அ.மி.த.க. பாடசாலை வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1.30மணிக்கு பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் வே. மோகனநாதன் தலைமையில் நடைபெறும்.

சங்கானைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆ. வ. சுணேசலிங்கம் பிரதம விருந்தினராகவும், முன்னாள் அதிபர் திருமதி ப. தர்மரத்தினம், சங்கானைப் பிரதேசசபை கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி பொ. சிவானந்தன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் பங்குபற்றுவர். (இ-3)

### பரீட்சைக்குத்தோற்றியிருந்தும்

# நீதிமன்ற கட்டுனர்களுக்கு நியமனம் கிடைக்கவில்லை

யாழ்ப்பாணம், மே 22
நீதி மன்றங்களுக்கு கட்டுனர்களைச் (பைண்டர்) சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகப்பரீட்சை நடந்து 15 மாதங்களாகியும் அவர்களது நியமனங்கள் தொடர்பான தகவல்கள் எவையும் இதுவரை வெளியிடப்படவில்லை. எனவே நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியவர்களின் நியமனங்கள் தொடர்பான தகவல்களை உடனடியாக வெளியிட வேண்டுமென யாழ். மாவட்ட நீதிமன்ற ஊழியர்கள் நீதிச் சேவைகள் ஆணைக்குழுவுக்கு மகஜர் ஒன்றை அனுப்ப உள்ளனர்.

நீதி மன்றங்களில் நீண்ட காலமாகப் பணியாற்றிவரும் ஊழியர்களில் இருந்தே கட்டுனர் பதவிக்கு ஆள்கள் தெரிவு செய்யப்படுவது வழக்கம். இவ்வாறு தெரிவு செய்வதற்காக ஒரு தொகுதியினருக்கு நேர்முகப்பரீட்சை 97 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்றது.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோருக்கான கடிதங்கள் நேர்முகப் பரீட்சைக்கான திகதிக்குப் பின்னர் தாமதமாகவே கிடைத்திருந்தன. எனினும் பெரும் சிரமத்தின் மத்தியில் விமானம் மூலம் சென்று நேர்முகப் பரீட்சைக்கு ஏழுபேர் மட்டுமே தோற்றியிருந்தனர். இவ்வாறுஇவர்கள் ஏழுபேரும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியிருந்த போதிலும் நீதிமன்ற நகலில் கட்டுனர்களுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை.

நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியவர்களின் நியமனங்கள் தொடர்பாக இதுவரை எந்தத் தகவல்களும் வெளியாகவில்லை. எனவே விரைவில் இவர்களின் நிலை குறித்த தகவல்களை வெளியிட வேண்டும் என அவர்கள் இந்த மகஜரில் கேட்டுள்ளனர். (ஐ-9)

**வாழ்த்துகின்றோம்**

நேற்று நடைபெற்ற உதைபந்தாட்ட ஆட்டத்தின் மூலம்
உப மாகாண சம்பியனாகிய
(1 ஆம் இடம்)
யாழ்ப்பாணம் சென். ஜேம்ஸ் ம. வி.
உதைபந்தாட்ட அணியை வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்.
யா/சென் ஜேம்ஸ் ம வி.

(56184)

**மரண அறிவித்தல்**

திருமதி
**பொன்னம்பலம் பாக்கியம்.**

திருநெல்வேலி காளிகோயிலடியை சேர்ந்த திருமதி பொன்னம்பலம் பாக்கியம் 21 — 05 — 1998 நேற்று பிற்பகல் காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான இராமுப்பிள்ளை தங்கமுத்து ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சோ. பொன்னம்பலம் ஆச்சாரியாரின் அன்பு மனைவியும், மாயாசோதி (மட்டக்களப்பு), விமலேந்திரன் (சவூதி அரேபியா), குணலேந்திரன் (டோகா), கமலசோதி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற மோகனதாஸ், சுசீலா, பத்மராணி, சுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரசாத், பிரசன்னா, விமல்சன், விமலிகா, துஷ்யந்தன், தர்ஷிகா, நர்மதன், அனோஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11. 00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
சி. சுப்பிரமணியம்
(மணியம் றைவர்)
(மருமகன்)

காளிகோயிலடி,
திருநெல்வேலி கிழக்கு.

(56186)

**கண்ணீர் அஞ்சலி**

எமது சக மாணவன்
சிவானந்தசர்மா (கோப்பாய் சிவம்)
அவர்களின் அன்புத் துணைவியார்
**தாட்சாயணி**

அவர்களின் மறைவு குறித்து எமது கண்ணீர் அஞ்சலியையும் அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்துநாகரிகம் சிறப்புக்கலை
3 ஆம் வருட மாணவர்கள்.

யாழ். பல்கலைக் கழகம். (56177)

**கண்ணீர் அஞ்சலி**

''கலையகம்'' உயர்கல்வி நிறுவன
உதவி நிர்வாகியும், ஆசிரியையும்,
கலையக உயர்கல்வி நிறுவன நிர்வாகி
ப சிவானந்த சர்மாவின் (கோப்பாய் சிவம்)
அன்பு மனைவியுமான

**திருமதி தாட்சாயணி சிவானந்த சர்மா**

அவர்களின் மறைவு குறித்து அன்னாரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய எமது கண்ணீர்ப் பூக்களையும் சமர்ப்பிக்கின்றோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள்.
"கலையகம்"
உயர் கல்வி நிறுவனம்
ஆவரங்கால் — புத்தூர்.

(56180)

யாழ். மாவட்ட விவசாயிகளே, இதோ!

**லங்கெம் கிருமிநாசனிகள்**

மிளகாய், வெங்காயம், கோவா போன்ற பயிர்களைத் தாக்கும் புழு, பூச்சிகளை கட்டுப்படுத்த அதிசிறந்த கிருமிநாசனி

**செலிக்றோன்**
[ப்றோஃபெனோஃபொஸ் 500கி/லீ]

**லனேற்** 40 ./. க. ப.
**எல்சான் தூள்** [பென் தோயெட்]

சகல பூச்சி புழுக்களையும் கட்டுப்படுத்தவல்ல கிருமிநாசனிகளை உடன் பெற்றுக்கொள்ள

**இராசலெட்சுமி ஸ்ரோர்ஸ்**

லங்கெம் ஏக விநியோகத்தர்கள்
இல. 150, கே. கே. எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.

பீடை கொல்லிகள் அபாயகரமானவை அவதானமாகப் பாவிக்கவும். (56183)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதவும் நாடுகளில்....

(முதலாம் பக்கத் தொடர்)

கொண்டார்.

★ தென்கிழக்கு ஆசிய நாடுகள் எதிர்நோக்கும் நிதி நெருக்கடிகள்.

★ ஜப்பானிய நாணயமான யென்னின் பெறுமதி வீழ்ச்சியடைந்தது.

★ வெளிநாட்டு உதவிகளில் ஜப்பான் 10 சதவீதம் குறைத்தது போன்ற காரணங்களினாலேயே இலங்கை எதிர்பார்த்த உதவியைப் பெற முடியாமற் போகும் என்று தெரிவிக்கப்படுகிறது.

உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச நாணயச் சபை ஆகியவை இலங்கையின் பொருளாதாரம் குறித்து தெரிவித்துள்ள கருத்துக்களை அடிப்படையாக வைத்து நான்கு அறிக்கைகளை இலங்கை தயாரித்துள்ளது என்றும் —

உதவும் நாடுகளின் பாரிஸ் மாநாட்டில் இந்த அறிக்கைகளைச் சமர்ப்பித்து உதவி வெட்டுக்குறைப்பிராக இலங்கை வாதாடும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அதேசமயம் இலங்கையில் தொடரும் யுத்தத்தால் ஏற்பட்டுள்ள ஸ்திரமற்ற தன்மை இந்த உதவி குறைக்கப்படுவதற்குக் காரணம் என கொழும்பில் உள்ள அரசியல் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டனர். (இ-3-7-21)

## கலதாரி...

(முதலாம் பக்கத் தொடர்)

தப்பட்டதாக விசாரணையில் தெரியவந்துள்ளதாகப் பொலீஸார் மேலும் தெரிவித்தனர். (இ-10-3)


**WANTED**

Wanted Trainee Clerks for a well Reputed Organization in Jaffna.

Please call over Personally with Educational Certificates and Testimonials at the Following Address:

"UTHAYAN"
361, Kasthuriyar Road,
Jaffna.

**அலுவலகச் சிற்றூழியர்**

ஏற்கனவே அலுவலகச் சிற்றூழியர்களாகப் பணி புரிந்தோர், ஜி. சீ. ஈ. (சாதாரண தர) பத்திரக் கல்வித் தகைமை உடையோர் இன்று நேரில் வரவும்.

அத்தாட்சிப் பத்திரங்கள், நற்சான்றிதழ்களைத் தவறாது எடுத்து வரவும்.

முகாமையாளர் (ஆளணி),
**உதயன்,**
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

சுப்ப ஸோ - வீடியோ ஸ்தாபனத்தாரின் இன்னுமோர் அங்கம் தான்...

**சுப்ப ஸோ - கலர்ப்படச் சேவை**

உங்கள் இன்றைய விழா வைபவங்களை நாளை உங்கள் கைகளில் பார்த்து இன்புறும் அளவுக்கு கலர் படமாக கழுவிப் பெற்றிட

இன்று யாழ்நகரில்!!!

சுப்ப ஸோ - கலர்ப்படச் சேவை

1997 ஆம் ஆண்டு கமரா உலகில் அறிமுகமான அதி சக்தி வாய்ந்த கொம்பியூட்டர் மூலம் கொழும்பில் கழுவப்படும் படங்களைப் போன்று அதே தரத்துடன் யாழ்ப்பாணத்திலும் உடனுக்குடன் உங்கள் கலர் படச்சுருள்களைக் கழுவிப் பெற்றிடவும்—

உங்கள் தொழில் சார்ந்த ஆள் அடையாள அட்டைப் படமாயினும் வெளியூர் கடவுச்சீட்டு படமானாலும், எதுவாயினும் எந்தெந்த அளவுகளில் உங்கள் படங்கள் தேவையாயினும் அவற்றை உடன் எடுத்து உடன் கழுவிப் பெற்றிடவும்—

**சுப்ப ஸோ - கலர்ப்படச் சேவை**
100 A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

குறிப்பு: உங்கள் தேவைகளுக்கு ஏற்ப சகல அளவுகளிலும் படங்களைக் கழுவிப் பெற்றுக் கொள்ளலாம். (சி-3806)

**புறொயிலர் குஞ்சு**

23-5-1998 சனிக்கிழமை காலை புறொயிலர் குஞ்சுகள் விநியோகிக்கப்படும். ஓடர் கொடுத்தவர்கள் உடன் வந்து பெற்றுக்கொள்ளவும். மற்றும் தேவையானோர் முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

"மல்லிகாபதி"
சந்தை முன் ஒழுங்கை,
மானிப்பாய்.
(சி/3802)


## பூவரசம்தீவில் ஷெல்லுக்கு இருவர் பலி!

திருகோணமலை மாவட்டம் கிண்ணியா பிரதேச செயலர் பிரிவில் முஸ்லிம் கிராமமான பூவரசம் தீவில் நேற்று முன் தினம் இரவு 12.30 மணிக்கு வீழ்ந்து வெடித்த ஷெல்லுக்கு 4 வயதுக் குழந்தையும், அக்குழந்தையின் பேரனும் உயிரிழந்தனர்.

ஆலங்கேணிப் பகுதியை நோக்கி மேற்கொள்ளப்பட்ட ஷெல் ஒன்றே பூவரசம் தீவில் வீழ்ந்து வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

## காங்கேசன்...

(முதலாம் பக்கத் தொடர்)

பதாக அந்தநிறுவனம் இணங்கியிருந்தது.

அந்த கால எல்லை கடந்த 20 ஆம் திகதியுடன் முடிவடைந்த போதும், அந்த நிறுவனம் இப்போது அந்த நிலையத்தை அமைக்கத் தயாராக இருப்பதாகவும் —

மின்நிலையத்துக்கான ஜெனரேட்டர்களையும், ரான்ஸ்போமர்களையும் கொழும்பில் இருந்து எடுத்து வர கப்பல் வசதியை அரசாங்கம் இன்னும் வழங்கவில்லை என்றும் — தெரிவிக்கப்பட்டது.

''லங்கா முடித'' என்ற கப்பல் மூலம் இந்தப்பொருள்களை ஏற்றி வர கடந்த 10 ஆம் திகதி ஏற்பாடு செய்து தருவதாக உறுதி கூறப்பட்டதாகவும் —

இறுதியில் அந்த ஏற்பாடு ரத்துச் செய்யப்பட்டு ஜூன் 15 ஆம் திகதி ஏற்றி வர ஏற்பாடு செய்வதாக உறுதிகூறப்பட்டுள்ளதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

இக்காரணங்களால் ஓகஸ்ட் மாதத்திலாவது இந்த நிலையம் மூலம் மின்சாரம் வழங்க முடியுமா என்ற கேள்வி தற்போது எழுந்துள்ளது.

யாழ். படைவட்டாரங்கள் மின் விநியோகத்தை வழங்க முனைப்புடன் செயற்பட்ட போதும் —

யாழ். மின்சாரசபை துரிதமாக மின் இணைப்புக்களை மேற்கொண்ட போதும் —

மின்நிலையத்துக்கான பொருள்கள் எடுத்து வர கப்பல் வசதியைவழங்க அரசாங்கம் பின்னடிப்பதால் கூடுதல் மின்சாரத்தை வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

காங்கேசன் மின் நிலையம் மூலம் ஜூன் மாதத்தில் மின்சார விநியோகம் செய்ய முடியும் என்றநம்பிக்கையில் மின்சாரசபைகூடுதல்ஆள்களுக்கு மின்சார இணைப்பைவழங்கியது.

அத்துடன் யாழ். நகரப் பகுதிக்கு 24 மணி நேரமும் மின்சாரம் வழங்குவதற்கான இணைப்பு வேலைகளையும் ஆரம்பித்திருந்தது.

கூடுதல் ஆள்களுக்கு மின்சார இணைப்பை வழங்கியதால் தற்போதுள்ள ஜெனரேட்டர்கள் மூலம் மின்சாரம் விநியோகிக்க முடியாததால் அடிக்கடி மின்தடை ஏற்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## சரோஜினியின்...

(முதலாம் பக்கத் தொடர்)

தது.

தற்சமயம் இந்தியாவில் தங்கியுள்ள கூட்டணியின் தலைவர் எம். சிவசிதம்பரம் ஒரு சில தினங்களில் நாடு திரும்பவிருப்பதாகவும் —

அவர் நாடு திரும்பியதும் சிவபாலனின் நியமனம் குறித்து இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும்— நேற்றிரவு கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேநேரம்—கடந்த ஞாயிற்றுக்கிழமை சுட்டுக்கொல்லப்பட்ட யாழ். நகர மேயர் திருமதி சரோஜினி யோகேஸ்வரனின் மரணம் தொடர்பாக யாழ். மாநகர சபை தேர்தல் ஆணையாளருக்கு தெரியப்படுத்தியுள்ளது. (இ-3-21)

# தமிழ்த்தினப் போட்டிகள் இன்றும் நாளையும்!

யாழ்ப்பாணம், மே 22

யாழ். கல்வி வலயம் ஒன்றுக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையேயான தமிழ் மொழித்திறன் போட்டிகள் இன்றும், நாளையும் யாழ். இந்து மகளிர் கல்லூரி, கன்னியர் மடம் ம. வி. ஆகியவற்றில் காலை 9 மணிமுதல் நடைபெறும்.

கோட்டமட்டப் போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்றவர்கள் இப்போட்டிகளில் பங்குபற்றுவர்.

பாவோதல், இசை, நடன நிகழ்ச்சிகள் யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும்—

வாசிப்பு, பேச்சு, இலக்கிய நாடகம், விவாதம் ஆகிய நிகழ்ச்சிகள் கன்னியர் மடம் ம. வியிலும் — இன்று காலை முதல் நடைபெறும்.

தமிழறிவு அரையிறுதிப் போட்டி நாளை காலை கன்னியர் மடம் ம. வியில் நடைபெற்று, இறுதிப் போட்டிகள் எதிர்வரும் 25 ஆம் திகதி காலை 11 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும். (இ-3)

## தேர்த் திருவிழா

ஆனைக்கோட்டை திருவருள் மிகு கரைப்பிரான் ஆதிவிநாயகர் தேவஸ்தான தேர்த் திருவிழா நாளை காலை 10.30 மணியளவில் நடைபெறும்.

தீர்த்தோற்சவம் மறுநாள் காலை 9.30 மணியளவில் நடைபெறும். (இ-139)

## விஜே சிலைக்கு அடிக்கல்

யாழ்ப்பாணம், மே 22

விஜய குமாரணதுங்காவின் முழு உருவ வெண்கலச் சிலைக்கான அடிக்கல் நடும் வைபவம் இன்று பகல் 12 மணியளவில் யாழ். கண்டி வீதி, வாடிவீட்டுச் சந்தியில் பழைய மாநகர சபைக் கட்டடத்துக்கு அருகில் நடைபெறவுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் வே. தங்கராசா சிலை அமைப்பதற்கான அடிக்கல்லை நடுவார் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-5)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

முடியாது; புதிய வலயங்கள் செயற்படவும் அனுமதிக்க முடியாது.

தற்காலிக ஆளணியினரைக் கொண்டு இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதை அனுமதிக்கவும் முடியாது — இப்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேசமயம், ''நிரந்தர ஆளணியினரைத் தேடி இத்திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவர 2 ஆயிரம் ஆண்டு செல்லும். ஆகவே மாற்று நடவடிக்கை எடுக்க அமைச்சர் முன்வரவேண்டும்'' என்று தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் த. மகாசிவம் கருத்து வெளியிட்டுள்ளார். (இ-3)

## திருமலையில் இன்று உண்ணாவிரதம்

திருகோணமலையில் நிர்க்கதி நிலையில் உள்ள தம்மை காங்கேசன்துறைக்கு அழைத்துச் செல்ல கப்பல் வசதி செய்து தருமாறுகோரி உப்புவெளிகண்ணாடித் தொழிற்சாலை முகாமில் தங்கியுள்ள அகதிகள் இன்று அடையாள உண்ணாவிரதம் மேற்கொள்ள விருக்கின்றனர்.

காங்கேசன்துறைக்கு அழைத்துச் செல்வதற்காக மன்னாரில் இருந்து ஏப்ரல் 29 ஆம் திகதி திருமலைக்கு தாங்கள் அழைத்து வரப்பட்டதாகவும்—

இன்னும் கப்பல் வசதி கிடைக்காததால் தாம் நிர்க்கதி நிலையில் உள்ளதாகவும் — தெரிவித்து மகஜர் ஒன்றை திருமலைப் பிரதேச செயலரிடம் அவர்கள் நேற்று சமர்ப்பித்தனர்.

கண்ணாடித் தொழிற்சாலை முகாமில் 213 அகதிகளும், களுத்துறை, மகரகம சிறைகளில் இருந்து விடுதலையான 13 பேரும் தங்கியுள்ளனர். (இ-3)

## ஒன்று கூடல்

சாவகச்சேரி மகளிர் கல்லூரி உயர்தர மாணவர் ஒன்று கூடல் இன்று உயர்தர மாணவர் மன்றத் தலைவி செல்வி க. செந்தில்மதி தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கல்வியியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் க. சின்னத்தம்பியும், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக விலங்கியற்துறை விரிவுரையாளர் திருமதி இராஜேந்திரமணி ஞானேஸ்வரனும் கலந்து கொள்வர்.

## முல்லைத்தீவுப்..

(முதலாம் பக்கத் தொடர்)

தப்பட்டது.

பொன்னுத்துரை கருணாகரன் (22 வயது) என்ற மீனவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

காயமடைந்த நிலையில் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டபோது தம்பையா இராசரத்தினம் (24 வயது) என்பவர் உயிரிழந்தார்.

இருவரும் உடுப்புக்குளத்தைச் சேர்ந்தவர்களாவர்.

இத்தாக்குதலில் காயமடைந்த 11 பேரில் மூவர் கடுங் காயங்களுக்குள்ளானார்கள். இவர்கள் புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பி. உதயகுமார் (32 வயது — கள்ளப்பாடு), ர. யோகேந்திரன் (21 வயது — உடுப்புக்குளம்), சந்திரசேகரம் (32 வயது — கள்ளப்பாடு) ஆகியோரே படுகாயமடைந்தவர்களாவர்.

ர. யோகேந்திரன் தனது கையை முழங்கையுடன் இழந்துள்ளார்.

இப்படி அந்தச் செய்திகள் மேலும் தெரிவித்தன. (இ-3)

## ரவி கருணநாயக்க...

(முதலாம் பக்கத் தொடர்)

முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாட்டில் பேசும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது—

எயர்லங்கா நிறுவனத்தின் பங்கை எமிரேட்ஸ் விமான நிறுவனத்துக்கு விற்றது தொடர்பாக கடந்த 19ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நடந்த விவாதத்தின்போது ரவிகருணநாயக்க ஐ. தே. கட்சிக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தில் பேசியதில் இருந்து அவருக்கும் ஐ. தே. கட்சிக்கும் இடையில் தொடர்பு இருப்பதை அறிய முடிந்தது.

அதேவேளை தனது வர்த்தக நோக்கங்களை அடைய முடியாததன் காரணத்தினால் கருணநாயக்க எயர்லங்கா தொடர்பாக அனாவசியமான அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார்.

இந்த இரண்டு காரணங்களாலுமே அவர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க அரசு தீர்மானித்துள்ளது இப்படி அவர் கூறினார். (இ-7-21-10

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்)லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22-05-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org